வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வாரமலர் ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 19.01.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 19 | பக்கங்கள் : 16

# இந்தியா இலங்கையின் உண்மையான நண்பன்!

## தேசிய பொங்கல் விழாவில் இந்தியத் தூதுவர் ஜா உறுதி



யாழ்ப்பாணம், ஜனவரி 19

இந்தியா, நிபந்தனையற்ற உறுதியான அண்டை நாடாகவும், இலங்கையின் அனைத்து முயற்சிகளிலும் உண்மையான நண்பனாகவும் இருந்திருக்கின்றது, எப்போதும் இருக்கும் என இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய பொங்கல் நிகழ்வில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்று இலங்கையின் நகர அபிவிருத்தி நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சலுடன் இணைந்து திருவள்ளுவர் குடியிருப்பு மாதிரி கிராமத்தை மாவட்டத்தில் 24 குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள் வழங்கி திறந்து வைத்தேன்.

இன்று (நேற்று) காலை புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருடன் அத்தோடு கடற்றொழில் அமைச்சருடன் இணைந்து யாழில் 11 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் இந்திய நிதி உதவியில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மத்திய நிலையத்துக்கு திருவள்ளுவர் கலாசார மையம் என்ற பெயர் சூட்டும் நிகழ்வில் கலந்துகொண்டேன். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கலாசார

15





## தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் தேசியப் பொங்கல்!

யாழ்ப்பாணம், ஜன. 19

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ் மாவட்டச் செயலகம் மற்றும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

15

## இலங்கையில் 10 பில்லியன் டொலரை முதலிட விரும்பும் சீன நிறுவனங்கள்!

கொழும்பு, ஜன. 19

இலங்கையில் 10 பில்லியன் டொலரை முதலீடு செய்ய சீன நிறுவனங்கள் விரும்புவதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசுமுறைப் பயணத்தில் இதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்கின் அழைப்பின் பேரில், கடந்த 14 முதல் 17ஆம் திகதி வரை ஜனாதிபதி சீனாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

பொருளாதார மற்றும் வர்த்தக மேம்பாடு, முதலீடு, சுற்றுலா, டிஜிற்றல் மாற்றம் மற்றும் பல்வேறு ஒத்துழைப்பு குறித்து இதன்போது ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க

15

## திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் என்று மாற்றம் பெற்ற யாழ்.கலாசார மத்திய நிலையம்




யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணம் - கலாசார மத்திய நிலையத்தின் பெயர் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் என மாற்றம் செய்யப்பட்டது. குறித்த பெயர் மாற்றும் வைபவம் நேற்று சம்பிரதாயபூர்வமாக குறித்த கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போது புத்த சாசன சமய

15

## 25ஆம் திகதி நடக்கவுள்ள சந்திப்பு திருப்புமுனையின் ஆரம்பப் புள்ளி

### கஜேந்திரகுமார் எம்.பி. நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 19

தமிழ்த் தேசிய அரசியலில் முக்கிய திருப்புமுனையின் ஆரம்பப் புள்ளியாக, எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திப்பு அமையும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நம்பிக்கை வெளியிட்டார்.

சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பாக கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு

15

## முன்வைத்த தீர்வுத் திட்டங்களை தொடர்ந்து கொண்டுசெல்ல முடிவு!

### உள்ளூராட்சித் தேர்தல்களில் முன்னர் கட்சியால் வேட்புமனு வழங்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை

### தமிழரசின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம்

திருமலை, ஜன. 19

அரசியல் தீர்வு தொடர்பில் தாங்கள் முன்வைத்த தீர்வுத் திட்டங்களைத் தொடர்ச்சியாக கொண்டு செல்வது எனவும், அதற்காக ஏழு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அத்துடன் உள்ளூராட்சித் தேர்தல்களில், முன்னர் தங்கள் கட்சியால் வேட்பு மனு வழங்கப்பட்ட வேட்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுக் காலை

15

## யாழ். நகைக் கடை கொள்ளை; பிரதான சூத்திரதாரி சிக்கினார்!

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாண நகரில் நகைக் கடைக்குச் சென்று நூதனமான முறையில் பணத்தை அபகரித்த சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி 5 இலட்சம் ரூபா பணத்துடன் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காலிங்க ஜெயசிங்கவின் வழிகாட்டலுக்கமைய யாழ்ப்பாண குற்ற விசாரணை பொலிஸ் பொறுப்பதிகாரி கெலும் பண்டார தலைமையிலான குழுவினர் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

15

## பயங்கரவாதச் சட்டத்தை இரத்துச் செய்யவேண்டும்!

### ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக் குழு

கொழும்பு, ஜன. 19

கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்க, இணையப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற கட்டுப்பாட்டுச் சட்டங்களை இரத்து செய்யுமாறு ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு வலியுறுத்தியுள்ளது.

15

## புங்குடுதீவு குளத்தில் ஆணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 19

புங்குடுதீவுப் பகுதியில் உள்ள குளம் ஒன்றிலிருந்து நேற்று சனிக்கிழமை ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியை சேர்ந்த 38 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.சவுடன் தனியார் பேருந்து இணைந்த சேவைக்கு இணக்கம்

## யாழ். நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து பெப்ரவரி மாதம் முதல் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.19

**யாழ். நகரில் அமைக்கப்பட்ட நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து இலங்கை போக்குவரத்துச் சபையும் தனியாரும் இணைந்து 01. 02. 2025 இலிருந்து நெடுந்தூர சேவைகளை ஆரம்பிப்பதற்கு இரு தரப்பினரும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இணக்கம் வெளியிட்டனர்.**

இதனையடுத்து, பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து இணைந்த நேர அட்டவணையின் கீழ் நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து சேவைகள் ஆரம்பமாகும் என ஆளுநர் அறிவித்துள்ளார்.

போக்குவரத்துப் பிரச்னை தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

இலங்கையில் வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இ. போ. சவும், தனியார் பேருந்து உரிமையாளர்களும் இணைந்து ஒரே இடங்களிலிருந்து சேவைகளை நடத்திவருகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், வடக்கு மாகாணத்திலும் அவ்வாறான நிலைமையை ஏற்படுத்துவதற்காக பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை பலனளிக்கவில்லை எனத் தெரிவித்தார். இனிமேலும் அவ்வாறு ஒருங்கிணைந்த சேவையை நடத்தாமல் இருப்பதற்கு அனுமதிக்க முடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், இதற்கு இரு தரப்பும் இணங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்தினால் ஒருங்கிணைந்த சேவைக்கு தயாராக இருப்பதாக இ. போ. சவின் தலைவர் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ள நிலையில், அதற்கு அமைவாக வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் இணைந்த நேர அட்டவணையை வர்த்தமானியில் குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்துவது என்றும், முதல் கட்டமாக இ. போ. சவும், தனியார் பேருந்து உரிமையாளர்களும் யாழ்ப்பாணம் நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து சேவைகளை எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிப்பது எனவும் இணக்கம் காணப்பட்டது. (எ-05)

# இன்று முழுநாள் நிகழ்வாக காரைநகர் பட்டறை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.19

பிரித்தானியக் காரை நலன் புரிச் சங்கத்தின் அனுசரணையில் காரைநகரைச் சேர்ந்த பல்வேறு பொது அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்து நடத்தும் காரைநகர்ப் பட்டறை நிகழ்வு - 2025 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணி தொடக்கம் காரைநகர் சலெஞ்செர்ஸ் விளையாட்டு மைதானத்தில் முழுநாள் நிகழ்வாக நடத்தப்படவுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வு தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

"ஊர் திரும்புதல்" எனும் பிரதான கருதுகோளை முன்வைத்து ஊரின் கலை மற்றும் பாரம்பரியம், விவசாய வளர்ச்சி மற்றும் நீர் மேலாண்மை, பொருளாதார முன்னேற்றம், தொழில்நுட்பத்தின் பங்கு தொடர்பான பல விடயங்கள் இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டு அவை தொடர்பாகப் பேசப்படவுள்ளன.

இதேவேளை, தமிழர் பாரம்பரிய நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தும் நோக்கில் ஒடியல் கூழ் மற்றும் சிறுதானிய உணவுகள் மக்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வில் கடல் உணவுகள், பதநீர் மற்றும் பிற பாரம்பரிய உணவுப் பொருட்களை மக்கள் சுவைத்துப் பார்க்க முடியும்.

நிகழ்வின் இறுதியில் காரைநகர்ப் பட்டறை நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட நீச்சல், கட்டுமரம், கபடி, கிளித்தட்டு மற்றும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளிலும், சதுரங்க, கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# யாழில் 41 மீனவர்களுக்கு வலைகள் வழங்கப்பட்டன




யாழ்ப்பாணம், ஜன.19


வடமராட்சி வடக்கு மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசத்தைச் சேர்ந்த 41 மீனவர்களுக்கு இந் திய அரசின் உதவியாக மீன்பிடி வலைகள் நேற்று முன்தினம் மாலை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் வைத்து இலங் கைக்கான இந்திய உயர்ஸ்தா னிகர் சந்தோஷ் ஜாவால் வழங்கப்பட்டன.பிரதேச செயலாளர் சத்தி யசீலன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ் வில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (எ-02)

# தமிழக முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆரின் ஜனனதின நிகழ்வு

வவுனியா,ஜன.19

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம். ஜி. இராமச்சந்திரனின் 108 ஆவது ஜனன தின நிகழ்வு வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா எம். ஜி. ஆர். நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் வாடி வீட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வின்போது, எம். ஜி. ஆரின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து, தீபமேற்றி, மலர் தூவி மரியாதை செய்யப்பட்டன. அத்தோடு, எம். ஜி. ஆர். தொடர்பான நினைவுப் பேருரைகளும், அவருடைய கொள்கைப்



பாடல்களும் ஒலிபரப்பட்டன.

இந்த நிகழ்வில், எம். ஜி. ஆர் நற்பணி மன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# யாழில் சிறப்பாக நடைபெற்ற எம். ஜி. ஆரின் பிறந்த தினம்



யாழ்ப்பாணம்,ஜன.19

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம். ஜி. இராமச்சந்திரனின் 108 ஆவது பிறந்த தினம் யாழில் கொண்டாடப்பட்டது.

யாழ். எம். ஜி. ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தினர் ஏற்பாட்டில் யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம். ஜி. ஆரின் சிலைக்கு முன்பாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

எம். ஜி. ஆரின் சிலைக்கு கல்வியங்காடு வர்த்தக சங்கத் தலைவர் அ. கேதீஸ் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து எம். ஜி. ஆர் மற்றும் யாழ். எம். ஜி. ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டன. இதன்போது, யாழ். எம். ஜி. ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தினரால் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (எ)

# வவுனியாவில் பொங்கல் விழா



வவுனியா, ஜன.19

வவுனியா பிரதேச செயலகத்தில் வருடாந்த பொங்கல் விழாவானது பிரதேச செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இதன்போது, பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள 9 கிளைகளுக்கு இடையில் பொங்கல் விழாவை முன்னிட்டு போட்டி நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றதுடன், தமிழர் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் முகமான நடனங்களும் நடைபெற்றன.

மேலும், ஒவ்வொரு கிளையினராலும் தமிழர் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (எ-10)

# இந்திய உதவி வீட்டுத்திட்ட மாதிரி கிராம திறப்புவிழா



கிளிநொச்சி,ஜன.19

கிளிநொச்சி, மலையாளபுரம் இந்திய உதவி வீட்டுத் திட்ட மாதிரிக் கிராம திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மலையாளபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட "திருவள்ளுவர் குடியிருப்பு" இந்திய உதவி வீட்டுத்திட்ட மாதிரிக் கிராமமே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

கிராமிய நகர வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் அநுர கருணாதிலகவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கலந்து கொண்டு மாதிரிக்கிராம வீடுகளை கையளித்தார்.இந்த நிகழ்வில், கிராமிய நகர வீடமைப்பு மற்றும் நிர்மா ணத்துறை பிரதி அமைச்சர் மற் றும் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னாரில் துப்பாக்கிச்சூடு

# வெளிநாட்டிலுள்ள நபருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு,ஜன.19

**மன்னார் நீதிமன்றத்தின் முன்னால் கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் போது இருவர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தை வழி நடத்தியவர் வெளிநாட்டில் வசிப்பதாகவும் அவருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கையை பெற்றுள்ளதாகவும் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகச் சந் திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மன்னார் நீதிமன்றத்தின் முன்னால் கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத் தின் போது இருவர் உயிரிழந் தனர். மாட்டு வண்டி சவாரியை அடிப்படையாக கொண்டு முரண்பாடு காணப்பட்டது. முதல் சம்பவத்தில் 2022 ஆம் ஆண்டு இருவர் உயிரிழந்தனர். அதனைத் தொடர்ந்து ஒருவர் வாகனத்தால் மோதப்பட்டு கொலை செய்யப்பட்டார். 2023 ஆம் ஆண்டு இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக் காகி உயிரிழந்தனர். இறுதியாக கடந்த வியாழக்கிழமை மன் னார் நீதிமன்றத்துக்கு முன்னால் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த இருவ ரும் முதலாவதாக இடம்பெற்ற இருவரின் மரணம் தொடர்பில் சந்தேக நபர்களாவர். எவ்வாறாக இருந்தாலும் இதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தச் சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகளை முன் னெடுத்துள்ளோம். குறித்த சம்பவத்தை வழி நடத்தியவர் வெளிநாட்டில் இருக்கின்றார். அவருக்கு எதிராக நாம் சிவப்பு எச்சரிக்கையை பெற்றுள் ளோம்”- என தெரிவித்தார்.

இதேவேளை, மன்னார் நீதிமன்றத்தின் முன்னால் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் விசார ணைகளை முன்னெடுக்க நான்கு பொலிஸ் குழுக்கள் நிய மிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# இந்திய உயர்ஸ்தானிகருடன் ஆளுநர், எம். பிக்கள் சந்திப்பு



யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, வடக்கு மாகாண ஆளுநர் மற் றும் பாராளுமன்ற உறுப்பினர் களுடன் சந்திப்பில் ஈடுபட் டார்.

யாழ். நகரில் உள்ள தனியார் விடுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு விருந் துடன் இந்தச் சந்திப்பு நடை பெற்றது.

இதன்போது, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திர சேகர், ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திர குமார் பொன்னம்பலம், கரு ணநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், மருத்துவர் எஸ். சிறீபவானந் தராஜா யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி உள்ளிட்டோர் கலந்துகொண் டனர். (எ)

# மருந்துகளை தட்டுப்பாடின்றி தொடர்ச்சியாக வழங்குங்கள்

## மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்துக்கு சுகாதார அமைச்சர் நளிந்த பணிப்புரை

கொழும்பு, ஜன. 19

நாட்டுக்கு தொடர்ச்சியாக தட்டுப்பாடுகள் இன்றி மருந்து களை வழங்குவதற்காக அடுத்த இரண்டு வருடங்களில் உற்பத்தி திறனை துரிதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு சுகா தார அமைச்சர் நளிந்த ஜய திஸ்ஸ அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்துக்கு பணிப் புரை விடுத்துள்ளார்.

பல்வேறு காரணிகளால் இந் நாட்டில் மக்களுக்கு சிகிச் சைக்கு தேவையான மருந்து களை தொடர்ச்சியாக வழங்கு வது சவாலாக மாறியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இரத்மலானையில் அமைந் துள்ள இலங்கை அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு அமைச்சர் இதனை கூறினார்.

மருந்து வழங்குநர் பற்றாக் குறை மற்றும் உலகளாவிய பிரச்னை விநியோக வலைய மைப்பின் சீர்குலைவு போன்ற காரணங்களால் அரசாங்க மருத்துவமனை அமைப்பினால் தொடர்ந்து மருந்து விநியோ கம் செய்ய முடியவில்லை என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மருந்து உற்பத்தித் திறனை அதிகரிக்க தேவையான மூலப் பொருட்களை உடனடியாக இறக்குமதி செய்வதில் உள்ள சிக்கல்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்த அமைச்சர், அதை சரிசெய்து உற்பத்தி திறனை அதிகரிக்க தேவையான திட் டங்களை தயாரிப்பது குறித்து அதிகாரிகளுடன் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினார்.

மேலும், ஒவ்வொரு நகரத் தையும் உள்ளடக்கும் வகையில் அரச மருந்தகச் சங்கிலியின் கிளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக் கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜப்பானிய அரசாங்கத்தின் நன்கொடையான இந்த நிறுவ னத்தின் தொலைநோக்கு பார் வையை அடைவதற்காக, நிறுவ னத்தின் பணிகளை மிகவும் முறையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடைமுறைப் படுத்துவதற்காக, நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக அதி காரிகளுடன் அமைச்சர் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட் டார்.

போதைப்பொருள் உற்பத்தி, மூலப்பொருட்கள், மருந்து ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற் றும் போதைப்பொருள் விநி யோக நிகழ்ச்சித்திட்டம், ஆய் வக வசதிகள், மற்றும் சந்தைப் படுத்தல், அத்துடன் நிறுவனத் தின் மனித வள மேம்பாடு ஆகியவற்றில் அமைச்சர் தனது கவனத்தை செலுத்தினார். (அ)

# செட்டிகுளத்தில் பொங்கல் விழா

வவுனியா, ஜன.19

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் பொங் கல் விழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் கே. சுலோஜனா உதவிப் பிரதேச செயலாளர் த. தர்மேந்திரா உதவித் திட்டமி டல் பணிப்பாளர் ம. தவமலர் கணக்காளர் விமலநாத சர்மா



மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர். (எ)

மன்னாரில் துப்பாக்கிச்சூடு

# சந்தேகநபர்களை கைது செய்வதற்கு மக்களிடம் உதவி கோரும் பொலிஸார்


மன்னார்,ஜன.19

மன்னார் நீதிவான் நீதிமன் றத்துக்கு முன்பாக கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக் கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தே கநபர்களைக் கைது செய்வதற்கு மன்னார் பொலிஸார் பொது மக்களிடம் உதவி கோரியுள்ளனர்.

மன்னார் நீதிவான் நீதிமன் றத்துக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர், அங்கு இருந்த நான்கு நபர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டு தப்பிச் சென்றனர்.

துப்பாக்கிச் சூட்டில் காய மடைந்த நால்வரும் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இருவர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து விசார ணைகளை ஆரம்பித்த பொலி



ஸார், நீதிமன்றத்துக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு துப்பாக்கி தாரிகளின் தோற்றத்துக்கு சமமான இரண்டு படங்களை வெளியிட் டுள்ளனர்.

இந்தப் படங்களில் உள்ள நபர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் மன்னார் பொலிஸ் நிலையத் தின் 071, 859, 1363 அல்லது 023, 222, 3224 என்ற தொலை பேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# நீர் சுத்திகரிப்பு நிலைத்துக்கு அமைச்சர் அநுர குழு பயணம்

கிளிநொச்சி, ஜன.19

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்தி கரிப்பு நிலையத்துக்கு நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை, வீடமைப்பு மற்றும் நீர் வழங் கல் அமைச்சர் அநுர கருணா திலக மற்றும் பிரதி அமைச்சர் ரி. பி. சரத் ஆகியோர் நேற்று முன்தினம் சென்றனர்.

இதன்போது, உலக வங்கி யின் நிதி உதவியுடன் நீர் வழங் கல் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட் டுள்ள புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளையும், அதன் செயல்பாடுகளையும் அமைச்சர், பிரதி அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் நீர் வழங் கல் வடிகாலமைப்புச் சபையி



னரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ். முரளிதரன் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை யின் வடக்கு மாகாண பிரதிப் பொது முகாமையாளர், உதவிப் பொது முகாமையாளர், பொறி யியலாளர்கள், உத்தி யோகத்தர் கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன நாணய மாற்று ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளுக்கு நீடிப்பு

கொழும்பு,ஜன.19

**இலங்கை மத்திய வங்கிக்கும், சீன மக்கள் வங்கிக்கும் இடையில் 2021 ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்ட இருதரப்பு நாணயப் பரிமாற்ற ஒப்பந்தம் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.**

இதன்படி, அசல் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் ஒப்பந்தம் வெற்றிகரமாக நீடிக்கப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் 10 பில்லியன் சீன யுவான் (சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள்) நாணய மாற்று வசதி மூலம் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நிதி ஒத்துழைப்பை தற்போதைய ஒப்பந்தம் பிரதிபலிக்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க, மத்திய வங்கியின் சார்பாக இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.மேலும், சீன மக்கள் வங்கி சார்பில் அதன் ஆளுநர் பென் கோன் ஷெங் கையெழுத்திட்டுள்ளார். (எ)

# 10 மாத குழந்தையை கொலை செய்த தாய்

அநுராதபுரம்,ஜன.19

ஹபரணை பொலிஸ் பிரிவின் பலுகஸ்வெவ பகுதியில் உள்ள வீடொன்றில் 10 மாத குழந்தை ஒன்று இறந்துவிட்டதாக பொலிஸ் நிலையத்துக்கு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

புலனகம, பலுகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது. பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் இது ஒரு கொலை என்பது தெரிய வந்தது.

இந்தக் குற்றச்செயல் தொடர்பில் குழந்தையின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவ தினத்தன்று குழந்தையின் தந்தை வீட்டில் இல்லை எனவும், அன்றிரவு (கடந்த 16ஆம் திகதி) குழந்தையை வீட்டுக்குப் பின்னால் உள்ள நீர் நிலைக்குள் வீசி பின்னர் குழந்தையை மீட்டு, வீட்டின் கட்டிலில் வைத்ததாக கைதான பெண் வாக்குமூலம் வழங்கியுள்ளார். (எ)

# 08 குடியிருப்புகள் முற்றாக தீக்கிரை

நுவரெலியா,ஜன.19

மஸ்கெலியா மவுஸ்லாக் கலை தோட்டத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 11. 30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 08 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாகத் தீக்கிரையாகியுள்ளன.

குறித்த தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்திருந்த 08 வீடுகள் சேதமடைந்ததுடன் இந்த வீடுகளில் குடியிருந்த 08 குடும்பங்களை சேர்ந்த 27 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் இருந்தவாகள் கூச்சலிட்டதை அடுத்து அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முற்பட்ட போதும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. அதனையடுத்து மஸ்கெலியா பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 2 மணித்தியாலயங்களுக்கு பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

எனினும், 08 வீடுகளில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன.(எ)

# ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் சஜித் பிரேமதாஸவுடன் சந்திப்பு

கொழும்பு,ஜன.19

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்றுச் சந்தித்தனர்.



இந்தச் சந்திப்பில், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மன் மொறேனோ, இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் பிரதி பிரதானி லார்ஸ் பிரெடல் உள்ளிட்ட தரப்பினர் கலந்து கொண்டனர்.இரு தரப்புக்கும் இடையே சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து நீண்ட கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

இதன்போது, 2024 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்களால் நடத்தப்பட்ட தேர்தல் கண்காணிப்பு அறிக்கை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கையளிக்கப்பட்டது.(எ)

# கிளீன் சிறீலங்கா திட்டத்தின் கீழ் கல்முனை கடற்கரைகள் துப்புரவு

கல்முனை,ஜன.19

“செழுமையான தேசம் அழகான வாழ்வு” என்ற தூர நோக்கை அடையும் விதத்தில் “கிளீன் சிறிலங்கா” வேலைத் திட்டத்தின் கீழ் நேற்று முன் தினம் காலை முதல் மாலை வரை கல்முனை பிராந்தியத்தில் கடற்கரை பிரதேசங்களை சுத்தம் செய்யும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன.




இதனடிப்படையில் கல்முனை கடற்கரை பிரதேசத்தை சுற்றியுள்ள கடற்கரைப்பகுதிகளை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தினருடன் இணைந்து கல்முனை பெரிய முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் உட்பட கடற்கரை நாகூர் ஆண்டனை தர்ஹா பள்ளிவாசல் நிர்வாகம் கல்முனை விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர், பிரதேச செயலகத் தினர், கல்முனை பிராந்திய பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சமூர்த்தி பயனாளிகள், கல்முனை விளையாட்டுக் கழகங்கள், பொது மக்கள் மேற் கொண்டிருந்தனர்.

# பாராளுமன்றில் சில பகுதிகளை புதுப்பிக்கும் பணியில் கடற்படை

கொழும்பு,ஜன.19

பாராளுமன்றத்துக்குள் உள்ள சில பகுதிகளைப் புதுப்பிப்பதற்கு கடற்படை இணக்கம் வெளியிட்டுள்ளது.



இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் படைக்கலச் சேவிதர் குஷான் ஜயரத்ன ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது, பாராளுமன்றத்துக்குள் உள்ள சில பகுதிகளைப் புதுப்பிப்பதற்கு கடற்படையிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய உதவிகள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

தேசிய பாதுகாப்பு மற்றும் இந்தத் திட்டங்களை வெற்றிகரமாக முடிப்பதை உறுதி செய்வதற்கு கடற்படையின் நிபுணத்துவத்தையும் ஆதரவையும் வழங்க விரும்புவதாக கடற்படைத் தளபதி பானகொட தெரிவித்தார்.

அபிவிருத்தியில் கடற்படை ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்பை சபாநாயகர் பாராட்டியதுடன், பாராளுமன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் கடற்படை காட்டிய ஆர்வத்துக்கு நன்றி தெரிவித்தார். (எ)

# குப்பைகளை அகற்றினால் தூய்மை இலங்கை ஆகாது

## கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

திருகோணமலை,ஜன.19

தூய்மை இலங்கை திட்டம் வெறும் குப்பைகளை சுத்தம் செய்வது மட்டுமல்ல எனகிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர தெரிவித்தார்.தூய்மை இலங்கை (கிளீன் சிறீலங்கா) திட்டம் குறித்து ஊழியர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு ஆளுநர் தலைமையில் திருகோணமலை உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வின்போது ஆளுநர் மேலும் கூறுகையில்,

தூய்மை இலங்கை திட்டம் வெறும் குப்பைகளை சுத்தம் செய்வது மட்டுமல்ல, சுற்றுச் சூழல், சமூக மற்றும் மனப்பான்மை மேம்பாட்டை உள்ளடக்கிய ஒரு நீண்டகால திட்டமாகும். இந்தத் திட்டத்தை சரிவர நாம் மட்டுமல்ல எமது நாட்டிலுள்ள அனைவரும் கடைப்பிடித்தால் மாத்திரமே அதில் வெற்றிகொள்ள முடியும். அதற்கான சகல செயல்திட்டங்களை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முன்னெடுத்து வருகின்றார் - என்றார்.

# பெண்களின் சுகாதார பாதுகாப்பு நடைமுறை குறித்து விழிப்புணர்வு

நாவிதன்வெளி,ஜன.19

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரனின் வழிகாட்டலுக்கமைவாக நாவிதன்வெளி பிரதேசத்தில் உள்ள மகளிர் சங்க அங்கத்தவர்களுக்கான சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு மத்திய முகாம்- 01 பல்தேவைக்கட்டடத்தில் நடைபெற்றது.

இதில், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் யூ.எல். ஹபீலா மற்றும் கள உத்தியோகத்தர் ஆர். அனுஷ்கா ஆகியோரும் மத்திய முகாம் 04 கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நாவிதன்வெளி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் டெ. றொசாயிறோ நிகழ்வில் கலந்து கொண்டு பெண்களின் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பாகவும், சமூகத்தில் அவர்களுக்கான அந்தஸ்து என்ன என்பது தொடர்பான தெளிவூட்டல்களை வழங்கினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
19.01.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், தை 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# செய்வதறியாத நாடாளுமன்ற உறுப்பினர்கள்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகள் பெரியளவில் பின்னடைவுகளை சந்தித்திருந்தன. அநுர அலையே இதற்கான காரணம் என்றும் கூறப்பட்டது. அநுர அலைக்கு தாக்குப் பிடிக்க முடியாதளவுக்கு தமிழ்த் தேசிய அரசியல் இருக்கின்றது என்றால் பிரச்னை வெளியில் இல்லை - உள்ளுக்குள்தான் பெரியளவிலான துவாரம் உண்டு. தமிழ்த் தேசியம் என்பதை வெறும் தேர்தல்கால சுலோகமாக வைத்திருக்கும் கட்சிகள் அனைத்துமே செயலற்ற கட்சிகளாகும் - இந்தக் கட்சிகள் மீதான மக்களின் ஈடுபாடு படிப்படியாக குறைவடைந்து கொண்டு செல்கின்றது.

இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஒரு மாற்றமாகக் கருதிய மக்கள் அதன் பக்கமாகச் சென்றனர். இது தொடருமா அல்லது தற்காலிகமானதா என்பதற்கு இப்போது பதில் கூற முடியாது. ஆனால் தமிழ்த் தேசியம் என்னும் வகைப்படுத்தல் அரசியலிலிருந்து மக்கள் அதிகம் விலகிச் செல்லும் நிலைமையே தொடரும். ஏனெனில் மக்களுக்கு நம்பிக்கையளிக்கக் கூடிய தமிழ் கட்சிகளோ அல்லது தமிழ் அரசியல் தலைவர்களோ களத்தில் இல்லை. இவ்வாறானதொரு சூழலில்தான் மக்கள் அவ்வப்போது எவர் தங்களுக்கு கவர்சிகரமானவராகத் தெரிகின்றாரோ அவரின் பின்னால் செல்கின்றனர்.

இதனை, தென்னிந்திய நடிகைகளை பார்ப்பதற்காக பனைமரத்தில் ஏறிய யாழ். இளைய தலைமுறையினர் எவ்வாறான உணர்வினால் வழிநடத்தப்பட்டனரோ அதே போன்றுதான் இந்த அரசியல் சலசலப்புக்களையும் நோக்க வேண்டும். மக்களை வழிநடத்தக் கூடியவர்களாக தங்களை நிரூபிக்க முடியாமல் போகும் சூழலில் மக்கள் இவ்வாறுதான் சிதறுவர். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

இவ்வாறான சூழலிலிலும் இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு கணிசமான மக்கள் வாக்களித்திருக்கின்றனர். எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவான நிலையில் அவர்கள் என்ன செய்கின்றனர்? அவர்களின் அரசியல் இயங்கு நிலை எவ்வாறுள்ளது என்று நோக்கினால் நாடாளுமன்றம் செல்வது, கொழும்பில் இருக்கும் வேளையில் மேற்கு நாட்டு தூதரகங்களைச் சேர்ந்த அரசியல் அலுவலர்களை அணுகி, தங்களுக்கு நேரம் தர முடியுமா என்று கேட்பதைத் தவிர இவர்களின் செயல்பாடு என்ன என்று கேட்டால் பதில் பூச்சியமாகும்.

இதற்கு அப்பால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொருளாதார, கல்வி விடயங்களில் எவ்வாறான சுயாதீன பங்களிப்புக்களை வழங்கலாம் - இந்த விடயங்களில் புலம்பெயர் சமூகத்தின் ஈடுபாட்டை எவ்வாறு ஒருங்கிணைக்கலாம் என்று சிந்தித்து, அதற்கான செயல்பாட்டை எவரும் முன்னெடுப்பதாகத் தெரியவில்லை. நாடாளுமன்றத்தில் பேசுவதால் மாற்றங்கள் ஏற்படும் என்றால் கடந்த பதினைந்து வருடங்களில் அவ்வாறான மாற்றங்கள் சிறிய அளவிலாவது ஏற்பட்டிருக்க வேண்டும் அல்லவா.

நாடாளுமன்ற உறுப்புரிமை என்பது அரசியலை கையாள்வதற்கான ஓர் அங்கீகாரம் மட்டுமே - தவிர அதனைக் கொண்டு எந்தவோர் அதியசயத்தையும் மேற்கொள்ள முடியாது. இதனைப் புரிந்து கொண்டே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் ஆனால் எதை நோக்கி செயல்படுவது - எவ்வாறு செயல்படுவது என்னும் புரிதலின்றியே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றனர். இதற்கு அடிப்படையான காரணம் தமிழ் அரசியலில் குறிப்பிட்டுச் செல்லக் கூடிய, அங்கீகாரமுள்ள ஓர் அரசியல் தலைமைத்தும் இல்லை. அவ்வாறானதொரு தலைமைத்துவம் அண்மைக்காலத்தில் தெரியக் கூடிய வாய்ப்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

# தேசிய பட்டியலுக்காக போட்டியிட்ட 74 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல்

*கொழும்பு, ஜன. 19*

கடந்த பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகளின் தேசியப் பட்டியலுக்காக போட்டியிட்ட வேட்பாளர்களில் தேர்தல் கால செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத 74 பேருக்கு எதிராக வழக்குத் தொடர தேர்தல்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

தற்போது, வேட்பாளர் பட்டியல்களை பொலிஸாரிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் சிந்தக குலரத்ன தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத 134 அரசியல் கட்சிகளுக்கு எதிராக தேர்தல்கள் ஆணைக் குழு வழக்குத் தொடர தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களின் எண்ணிக்கை எண்ணூறுக்கும் மேல் என்பதால் அவர்கள் மீதும் தனித்தனியாக வழக்கு தொடரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த பொலிஸ் நிலையங்களினால் விசாரணைகள் மேற்கொண்டு, விசாரணைக் கோப்புகள் சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் குலரத்ன கூறினார்.

அதேவேளை, செலவு அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு எதிராக அபராதம், சிறைத் தண்டனை அல்லது தேர்தல் நடவடிக்கைகளுக்கு தடை விதிப்பது போன்ற சட்ட நடவடிக்கை எடுக்கவும் சட்டத்தில் விதிகள் உள்ளதாக கூறப்படுகிறது. (அ)

## மட்டு. வாவியில் கரையொதுங்கிய பெண்ணின் சடலம்

*மட்டக்களப்பு,ஜன.19*

மட்டக்களப்பு வாவியில் அடையாளங்காணப்படாத நிலையில், பெண்ணொருவரின் சடலம் கரையொதுங்கியது.

மட்டக்களப்பு வாவிக் கரை முனீச் விக்றோரியா நாட்புற வீதிக்கு அருகாமையில் உள்ள வாவியிலிருந்தே குறித்த சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

## கணித பாடத்திற்கு இலவச கருத்தரங்கு

*யாழ்ப்பாணம், ஜன. 19*

வட மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் க.பொ .த .சாதாரண தர மாணவர்களுக்கான கணித பாடத்திற்கான இலவச கருத்தரங்கு எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரை சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் பிரதம அதிதியாக சட்டத்தரணி வசந்த சேனன் கலந்து கொள்ளவுள்ளார். மெய்கண்டான் தமிழ் வித்தியாலயம், மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை, சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மாணவர்கள் பங்கேற்கவுள்ள இக்கருத் தரங்கிற்கான ஏற்பாடுகளை மன்றத்தலைவர் உமாபதி, பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (அ)

## வைத்தியசாலை வள பற்றாக்குறை சுகாதார அமைச்சின் கவனத்துக்கு!

*ரவிகரன் எம்.பி.தகவல்*

*முல்லைத்தீவு, ஜன. 19*

முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியாசாலையில் காணப்படும் வளப் பற்றாக் குறைகள் தொடர்பில் தாம் சுகாதார அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர் வரும் நாட்களில் பிரதமரின் கவனத்துக்கு கொண்டு சென்று முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்திய சாலையில் நிலவும் சிக்கல் நிலைமைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - கரை துறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன் தினம் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்திய சாலையில் நிலவும் வளப்பற்றாக்குறைகள் தொடர்பில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. (அ)

## உணவகம் ஒன்று இடிந்து விழுந்ததில் 6 பேர் காயம்!


*கொழும்பு, ஜன. 19*

கினிகத்தேனை நகரில் நேற்றுக் காலை உணவகம் இடிந்து விழுந்ததில் 6 பாடசாலை மாணவர்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக கினிகத் தேனை பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பயிற்சி வகுப்புக்காக நகருக்கு வந்த மாணவர்கள் சிற்றுண்டிச்சாலையில் உணவருந்திக்கொண்டிருந்த போது, அவர்கள் இருந்த அடித்தளத்தின் தளம் சுமார் 15 அடி சாய்வாக விழுந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பாதுகாப்பற்ற கட்டுமானத்தால் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். மாணவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்றும் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனவும் கூறப்பட்டது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணவிலக்குகள் மறைந்து போகட்டும் !

இரா. சாந்தகுமார்



'ஆயிரம் பொய் சொல்லியும் ஒரு கல்யாணம் செய்யலாம்' என்பது அக்காலச் சொலவடை. அதற்கேற்ப பல பொய்களின் பின்னணியில் செய்விக்கப் பட்ட அக்காலத் திருமணங்களில் பல, சமூக நிர்பந்தங்கள் காரணமாகத் தொடர்ந்தன. ஆனால் வெளிப்படைத் தன்மையில்லாது, ஒளிவு மறைவு உள்ள எந்த உறவும் நீண்ட காலம் ஆத்மார்த் தமாக நீடிக்க வாய்ப்பில்லை என்பதே உண்மை. திருமண உறவுகளுக்கு இது நூறு சதவீதம் பொருந்தும்.

வெவ்வேறு தொழில் செய்யும் தம்பதியினரிடையே அவர்களின் தொழில் சார்ந்த பிரச்னைகளால் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதாலேயே மருத்துவர் மாப்பிள்ளைக்கு, மருத்துவர் மணப்பெண் என தொழிலையும் பத்து திருமணப் பொருத்தங்களோடு பதினோராவது பொருத்தமாக நம்மவர்கள் சேர்த்தனர். ஆனால் ஒரே தொழில் செய்யும் தம்பதியர் கூட, எதேனும் காரணத்தைக் காட்டி மணவிலக்குக் கோருவது அதிகரித்து வருகிறது.

மணவிலக்கு பெற்றுவிட்ட தம்பதியினர் அதன் பின்னரும் இச்சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்னைகள், மன உளைச்சல்கள் ஏராளம். மணவிலக்கு பெற்று தனித்து வாழும் தம்பதியரின் பெற்றோர், தங்கள் பிள்ளைகளின் மணவிலக்கு குறித்த 'அனுதாப விசாரிப்பு' களால் ஏற்படும் சங்கடங்களைத் தவிர்க்க, தங்கள் நெருங்கிய உறவினர்கள் இல்லங்களில் நடைபெறும் திருமணம், பிறந்தநாள் விழா போன்றவற்றில் கூட பங்கேற்காமல், சமூகத்திலிருந்து விலகி வாழ்வது எத்துணை மனவலியை ஏற்படுத்தும் என்பது வார்த்தைகளில் விவரிக்க இயலாதது.

சில குடும்பங்களில் மணவிலக்கு பெற முன்வரும் இளம் தம்பதியினரிடையே உள்ள கருத்து வேறுபாடுகளை அவர் தம் பெற்றோர்கள் பேசி சமரசம் செய்வதற்குப் பதிலாக, இருதரப்பாகப் பிரிந்து நின்று தங்கள் பிள்ளைகளின் மகிழ்ச்சிக்கு மணவிலக்கு மட்டுமே ஒரே தீர்வு என்பதாக முடிவு செய்து, அதற்கான முயற்சிகளில் தீவிரமாகத் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதை என்னவென்பது?

மணவிலக்கு பெற்ற பெற்றோரின் குழந்தைகள், ஒற்றைப் பெற்றோரைக் கொண்டு வளரும் குழந்தைகள், தாய் அல்லது தந்தை எனும் உறவு துண்டிக்கப் பட்ட நிலையில் பிற குழந்தைகளோடு பழகும் சூழலில் அடையும் உளவியல் ரீதியான சிக்கல்கள் ஏராளம்.

பொதுவாக, மணவிலக்கு என்பது முன்பின் அறியாத நிலையில் திருமண உறவில் புதிதாக இணையும் இளம் தம்பதிகளிடையே உருவாகும் கருத்து வேறுபாடுகளால் நிகழ்ந்தன. தற்போது, திருமண உறவுக்கு முன்னரே நன்கு அறிமுகமாகி, பழகிய பின்னர் திருமண உறவுக்குள் அடியெடுத்து வைக்கும் தம்பதியரிடமும் மணவிலக்கு நிகழும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

திருமண பந்தத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள எண்ணுவோர், சமீப காலங்களில் மணவிலக்கு வழக்குகளின் தன்மைக்கு ஏற்ப, நீதிமன்றங்கள் அவ்வப்போது பிறப்பித்துள்ள உத்தரவுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வது அவசியம். ஜீவனாம்சம் பெறும் பெண்களைத் தாழ்வாக எண்ணும் போக்கு, பொதுவாக சமுதாயத்தில் நிலவும் சூழலில், மணவிலக்கு வழக்கில் கணவனால் மனைவிக்கு கொடுக்கப் படும் ஜீவனாம்சம், கணவனுக்கான அபராதமல்ல என்றும், மனைவி சமூகத்தில் கண்ணியமாக வாழ்வதை உறுதி செய்வதற்கான தொகை என்றும் கருத்து தெரிவித்துள்ளது.

மணவிலக்கிற்குப் பிறகு கணவனோ, மனைவியோ தம் பிள்ளைகளின் நலன் மற்றும் தமக்கான சமுதாயப் பாதுகாப்பு ஆகிய காரணங்களுக்காக மறுமணம் செய்து கொள்வது வரவேற்கத்தக்கதே. அதே வேளையில் மறுமணம் குறித்தான முடிவு அவசர கதியில் அல்லாது, மறுமணம் செய்து கொள்ளப் போகிறவரின் மனப்பக்குவம், அவரின் குடும்பப் பின்னணி ஆகியவற்றை நன்கு ஆராய்ந்த பின்னரே எடுக்கப்பட வேண்டும். ஏனெனில் மறுமணமும் தோல்வி அடையும் நிலையில், அதன் விளைவாக சம்பந்தப் பட்ட தம்பதியரின் மனதில் ஏற்படும் விரக்தியும், ஏமாற்றங்களும் வாழ்க்கையில் மிகக் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

திருமண பந்தம் எனும் ஆயிரங் காலத்துப் பயிரின் வித்து பல தலைமுறைகளைக் கடந்து செழித்து வளர்வதற்காக ஊன்றப்பட்டதேயன்றி, முளைவிட்டு வளரும் தருணத்தில் வேருடன் பிடுங்கி வீசி எறியப்படுவதற்காக அல்ல. இதனை உணர்ந்து தம்பதியினர் உண்மைத்தன்மையுடன் விட்டுக் கொடுத்து வாழத் தொடங்கினால், மணவிலக்குகள் மறைந்து, திருமண உறவுகள் செழித்தோங்குவது நிச்சயம்.

## இந்தவார ராசிபலன் 19.01.2025 - 25.01.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - தை 06
நல்ல நேரம்: 09.33 - 11.03 ராகு காலம் : 05.03 - 06.33 திதி : பஞ்சமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் மகிழ்ச்சி மிக்க வாரம். விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள். நல்ல யோக பலன்களை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தடையின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திசையை நோக்கிச் செல்லும். புதிய, பழைய நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். மாணவர்கள் தினசரி தங்கள் பாடங்கள் அக்கறையுடன் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறமுடியும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் புது புது வியாபார முயற்சியில் ஈடுபட்டு அதிக தன வருமானம் ஈட்டுவீர்கள். வியாபாரப் பயணங்கள் மூலம் வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்து விடுவார்கள். உறவு மற்றும் நண்பர்கள் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக ஆதாயம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த சுபகாரியச் செய்திகள் வருவதோடு செலவுகளும் அதிகரிக்கும். மேடைப் பேச்சாளர்கள் புகழ் பெறுவர்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் தெய்வீக சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். அரசு உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். எனவே, ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்கள் செயல்பாடுகளில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்களுக்குப் புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். எதிர்பார்த்தபடி அதிக தனவரவுகள் கைக்கு வந்து சேரும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாகக் கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களைக் கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பணவிஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பயணத்தின் போது எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்களையும், கௌரவத்தையும் அடைவீர்கள். தொலைதூரப் பயணங்களால் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன் பிறப்புக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படலாம்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உடன் பிறப்புக்களிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவிகள் கிடைக்கும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாகச் செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறுசிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்புமிக்கவர்களின் நட்பு ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உங்களுக்குத் திடீர்ப் பயணங்கள் மூலமாக ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்துவிடுவீர்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும். அரசுப்பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். சிலநேரங்களில் சுறுசுறுப்பற்ற நிலையும், மனோபயமும் நிலவும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகளால் நன்மைகளும் ஏற்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் அரசுப் பணியாளர்கள், மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது, பணி உயர்வு மற்றும் முன்னேற்றத்துக்கு நல்லது. உடல் உபாதைகள் காரணமாகத் தொழிலில் உற்பத்தி பாதிப்புக்கள் ஏற்படலாம். ஆயினும், எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். புதிய கடன்களை வாங்க வேண்டிய சூழ்நிலை எழும். நற்குணம் உள்ள நபர்களின் அருகாமை நலம் பயக்கும். புதிய முதலீடுகளால் தொழிலில் ஏற்றம் காணலாம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் அன்னையின் அன்பும், அரவணைப்பும், உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும் படியான அதிகாரம் மிக்க பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சுகமான சுற்றுலாப் பயணங்களால் மனதில் மகிழ்ச்சி பொங்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் அரசுப் பணியாளர்கள், மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது, பணி உயர்வு மற்றும் முன்னேற்றத்துக்கு நல்லது. உடல் உபாதைகள் காரணமாகத் தொழிலில் உற்பத்தி பாதிப்புக்கள் ஏற்படலாம். ஆயினும், எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பொன், பொருள், ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல்ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடும் கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலமாக பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளீன் சிறீலங்கா உண்மையில் அர்த்தமுடைய செயல்திட்டமாக அமைய வேண்டுமானால்...!

ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் பேரார்வம் மிகுந்த திட்டமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்கும் " கிளீன் சிறீலங்கா" (Clean Sri Lanka) செயற்திட்டம் குறித்து நேர்மறையானதும் எதிர்மறையானதுமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆசியப் பிராந்தியத்திலேயே மிகவும் தூய்மையான நாடாக இலங்கையை மாற்றும் நோக்குடன் தனது அரசாங்கம் இந்த விசேட செயற்திட்டத்தை முன்னெடுக்கும் என்று பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களின் போது ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு கூறினார்.

ஆனால், கிளீன் சிறிலங்காவுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் ஆரம்பக்கட்ட அணுகுமுறைகளின் விளைவாக கிளம்பிய விமர்சனங்களை அடுத்து அரசாங்க தலைவர்கள் இந்த செயற்திட்டம் வெறுமனே சுற்றுச்சூழலை துப்புரவாக்குவதுடனோ அல்லது பஸ்களிலும் முச்சக்கர வண்டிகளிலும் பொருத்தப்பட்டிருக்கும் மேலதிக உபகரணங்களை அகற்றுவதுடனோ மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல என்றும் பொதுவில் சமுதாயத்தின் பல்வேறு பிரச்சினைகளையும் கையாளுவதற்கான பரந்த இலட்சியத்தை கொண்டது என்றும் விளக்கம் அளிக்க வேண்டியநிலை ஏற்பட்டது.

ஜனவரி முதலாம் திகதி கிளீன் சிறிலங்கா செயற்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி திசாநாயக்க புதிய வருடம் இலங்கையில் புதியதொரு அரசியல் கலாசாரத்தின் தொடக்கத்தை குறிக்கிறது என்று பிரகடனம் செய்தார்.

"குடும்ப ஆதிக்க அரசியல், அதிகார துஷ்பிரயோகம், பொதுநலன்களுக்கு மேலாக தனிப்பட்ட நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசியல் உயர்குழாம் ஒன்றின் உருவாக்கம் போன்ற நடைமுறைகளை ஒழித்துக் கட்டும் இலட்சியத்தை நாம் கொண்டிருக்கிறோம். மக்களின் அபிலாசைகளுக்கு இசைவான அரசியல் கலாசாரம் ஒன்றை தோற்றுவிப்பதில் நாம் பற்றுறுதி கொண்டிருக்கிறோம். அதனால், எமது சமுதாயத்தை குணப்படுத்தி புதிய பண்புகளுடனும் கோட்பாடுகளுடனும் கூடிய ஒரு புதிய முறைமையை உருவாக்க வேண்டியது அவசியமாகிறது" என்றும் அவர் கூறினார்.

கிளீன் சிறிலங்கா தொடர்பாக அண்மையில் பாராளுமன்றத்தில் விளக்கமளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய இந்த செயற்திட்டத்தின் ஊடாக இலங்கை சமுதாயத்தில் நேர்மறையான மாற்றங்களைக் கொண்டு வரமுடியும் என்ற நம்பிக்கை தங்களுக்கு இருப்பதாகவும் இலங்கையை அபிவிருத்தியடைந்த ஒரு நாடாக கட்டியெழுப்புவதற்கு சமூக, தார்மீக மற்றும் சுற்றுச்சூழல் கோட்பாடுகளை வகுத்துச் செயற்படுவதற்கு உறுதி பூண்டிருப்பதாகவும் கூறினார்.

நல்லாட்சிக் கோட்பாட்டின் மூலமாக சமூகத்தின் சகல மட்டங்களிலும் ஊடாட்டத்துக்கும் மனித உறவுகளுக்குமான பண்புகளையும் நெறிமுறைகளையும் வகுத்து "சிரிக்கும் மக்களைக்" கொண்ட ஒரு அழகான தேசமாக இலங்கையை மாற்றுவதே தங்களது இறுதிக் குறிக்கோள் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

கிளீன் சிறிலங்கா செயற் திட்டம் தொடர்பாக அரசாங்க தலைவர்கள் அளித்திருக்கும் விளக்கங்களின் அடிப்படையில் நோக்கும்போது உறுதியான தார்மீகப் பண்புகளைப் பின்பற்றும் மக்களைக் கொண்ட நாடாக இலங்கையை மாற்றுவதே அவர்களது இலட்சியம் என்பதை புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

சுற்றுச்சூழல் தூய்மையை மாத்திரமல்ல, கலாசாரத் தூய்மையின் அவசியத்தையும் மக்களுக்கு உணர்த்துவதில் அக்கறை கொண்டவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். சிறந்த சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு மக்களின் நடத்தைகளில் பண்புரீதியான மாற்றத்தை ஊக்குவிப்பதில் (எவ்வாறு சிந்திப்பது, எவ்வாறு உணர்வது, எவ்வாறு செயற்படுவது) அரசாங்கம் அக்கறை கொண்டு செயற்படுகிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.



முறைமை மாற்றத்தை வேண்டிநின்ற முன்னென்றுமில்லாத வகையிலான ஒரு மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு பழைய பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சிகளை நிராகரித்த மக்கள், தேசிய மக்கள் சக்தியை அதிகாரத்துக்கு கொண்டுவந்தார்கள். அவர்கள் ஜனாதிபதி திசாநாயக்கவிடமும் அவரது தலைமையிலான அரசாங்கத்திடமும் முற்றிலும் வேறுபட்ட தலைமைத்துவப் பாங்கையும் ஆட்சி முறையையும் எதிர்பார்க்கிறார்கள். முன்னைய ஒழுங்குமுறையில் மாற்றம் வேண்டும் என்று மக்கள் விரும்பினாலும் கூட, புதிய முறைமையோ அல்லது புதிய அரசியல் கலாசாரமோ எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றிய தெளிவு சாதாரண மக்களுக்கு இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அது விடயத்தில் நாட்டின் அரசியல் தலைமைத்துவமே அவர்களுக்கு வழிகாட்டவேண்டும்.

இதுகாலவரையில் ஆட்சிசெய்த அரசியல் தலைவர்கள் மக்களை தவறாக வழிநடத்தியது மாத்திரமல்ல, மக்கள் மத்தியில் இருந்த தவறான சிந்தனைகளை தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்தி அதிகாரத்தை வலுப்படுத்தினார்கள். மக்களுக்கு சரியான பாதையைக் காட்டவேண்டிய தலைவர்கள் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது என்ற போர்வையில் தவறான சிந்தனைகளை மக்கள் மத்தியில் வலுப்படுத்தக்கூடிய அரசியல் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்தார்கள். நாடு இன்று எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளுக்கும் அதுவே அடிப்படைக் காரணமாகும்.

அதனால், முன்னைய அரசியல் தலைவர்கள் பிரச்சினைகளை கையாளுவதற்கு கடைப்பிடித்த அணுகுமுறைகளில் இருந்து எந்தளவுக்கு வேறுபட்ட அணுகுமுறையை ஜனாதிபதி திசாநாயக்கவினால் கடைப்பிடிக்கூடியதாக இருக்கும் என்பதிலேயே புதிய கலாசாரம் மற்றும் புதிய விழுமியங்களைக் கொண்ட சமுதாயத்தை தோற்றுவிப்பது பற்றிய அவரது பிரகடனங்களுக்கு நம்பகத்தன்மை கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

கடந்த கால அரசியல் காரணமாக இலங்கை இனரீதியாக பிளவுபட்ட ஒரு சமுதாயமாகவே இருக்கிறது. அந்த சமுதாயத்தில் பண்பு ரீதியான எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டுமானால் இனங்களுக்கு இடையிலான உறவுகளில் ஆரோக்கியமான மாற்றங்கள் ஏற்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

> சிறீலங்காவை உண்மையாகவே "கிளீன்" செய்வதாக இருந்தால் இனப்பிரச்னையில் பெரும்பான்மைச் சமூகத்தின் மனநிலையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுவதற்கு ஜனாதிபதி தன்னை அர்ப்பணிக்க வேண்டும். கிளீன் சிறீலங்கா முழுமையானதாக அமைவதற்கு இது இன்றியமையாதது.

இலங்கையில் இனிமேல் இனவாத அரசியலும் மதத்தீவிரவாதமும் தலையெடுப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதியும் அரசாங்க தலைவர்களும் திடசங்கற்பம் பூண்டிருக்கின்ற போதிலும், இதுகாலவரையான இனவாத அரசியல் காரணமாக சமூகங்களுக்கு இடையில் வேரூன்றியிருக்கும் அவநம்பிக்கையையும் ஐயுறவுகளையும் ஓரளவுக்கேனும் தணிக்கக்கூடிய தெளிவான அறிகுறிகளை அவர்களின் நடவடிக்கைகளில் காண முடியவில்லை. கிளீன் சிறிலங்காவுக்கு பொறுப்பான ஜனாதிபதி செயலணிக்கு உறுப்பினர்களை நியமித்த விடயத்தில் கூட புதிய காலாசார நாட்டம் வெளிக்காட்டப்படவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது.

அரசாங்கம் கூறுகின்றதைப் போன்று இலங்கைச் சமூகத்தின் சிந்தனையில் தார்மீக அடிப்படையிலான பண்பு மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டுமானால் இனத்துவ சமூகங்களின் நியாயபூர்வமான அபிலாசைகளை மதிக்கின்ற ஒரு மனமாற்றம் மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன் தேசிய இனப்பிரச்சினை பற்றிய தெளிவான புரிதலும் ஏற்பட வேண்டும். ஆனால், அரசாங்கத் தலைவர்கள் அது விடயத்தில் போதிய அக்கறைகாட்டும் மனநிலையில் இருப்பதாக தெரியவில்லை.



வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முதற்தடவையாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தென்னிலங்கை சிங்கள தலைமைத்துவத்தைக் கொண்ட ஒரு தேசிய அரசியல் கட்சி பாரம்பரியமாக சிறுபான்மைச் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சிகளை விடவும் கூடுதலான பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றியிருக்கிறது. தேசிய மக்கள் சக்தி சாதித்திருக்கும் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியின் மூலமான செய்தியை ஜனாதிபதியும் அரசாங்கமும் தவறான உகந்த முறையில் விளங்கிக்கொண்டதாக தெரியவில்லை.

தேர்தல் முடிவுகள் தொடர்பான நியாயபூர்வமான அரசியல் விவாதங்களில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் குறித்து இலங்கையின் முக்கியமான ஒரு அரசறிவியல் நிபுணரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொடவின் வார்த்தைகளில் கூறுவதானால், "வடக்கு, கிழக்கில் தாங்கள் அடைந்த தேர்தல் வெற்றியை இனவாத அடிப்படையிலான அரசியல் நிகழ்ச்சி நிரலின் நிராகரிப்பாகவும் இலங்கையில் தேசிய ஐக்கிய அரசியலின் புதிய கட்டத்தின் ஒரு தொடக்கமாகவும் தேசிய மக்கள் சக்தி நோக்குகிறது. தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழ்கின்ற மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த அமோக ஆதரவை அதிகாரப் பரவலாக்கத்தை வேண்டிநிற்கும் அரசியலின் தகுதி மற்றும் தமிழ்த் தேசியவாத அபிலாசைகளின் நிராகரிப்பு என்று மிகை மதிப்பீடு செய்யக்கூடாது. சுதந்திரத்துக்கு பின்னரான தசாப்தங்களில் அரசியல் சமத்துவத்துக்கான சிறுபான்மையினச் சமூகங்களின் கோரிக்கைளை பெறுமதியற்றதாக்குவதற்கான ஆயுதமாக வடக்கு, கிழக்கின் தேர்தல் முடிவுகளை தேசிய மக்கள் சக்தி பயன்படுத்தக்கூடாது."

தேசிய மக்கள் சக்திக்கு நாடுபூராவும் கிடைத்த அமோக ஆதரவை ஜனாதிபதி திசாநாயக்கவும் அரசாங்கமும் சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் அபிலாசைகளுக்கும் அதிகாரப்பரவலாக்கல் கோட்பாட்டுக்கும் பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியில் நிலவும் ஆழக்காலூன்றிய தவறான நிலைப்பாடுகளை மாற்றியமைப்பதற்கு பயன்படுத்தினால் மாத்திரமே புதிய கலாசாரம் பற்றிய பேச்சுக்களுக்கு உண்மையில் அர்த்தம் இருக்கும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சமத்துவத்தையும் ஜனநாயகத்தையும் உள்ளூராட்சி, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் அரசியல் மற்றும் நிருவாக அதிகாரப் பரவலாக்கத்தையும் உத்தரவாதம் செய்யும் என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய ஜனாதிபதி திசாநாயக்க, இலங்கையின் அரசியலமைப்பில் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் இருக்கின்ற ஒரேயொரு சட்ட ஏற்பாடான 13ஆவது திருத்தம் குறித்து எதையும் குறிப்பிடவில்லை.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக முன்னாள்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசாங்கத்தின் நெறிமுறைகளுடன் அரச பொறிமுறைகள் பொருந்தியமைவது அவசியம்



கலாநிதி ஜெகான் பெரேரா

கடந்த காலத்தில் இருந்து அரசாங்கம் இரு தொகுதி பிரச்சினைகளைப் பெற்றிருக்கிறது. ஒன்று உள்ளகமானது. மற்றையது வெளியகமானது. ஆனால், இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவை. வெளியக பிரச்சினைகளில் பலவீனமான நிலையில் இருக்கும் பொருளாதாரமும் அடங்குகிறது. எந்த தராதரத்தில் பார்த்தாலும் பொருளாதாரம் இப்போது சீர்செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆனால், அபிவிருத்தியின் பயன்கள் பரந்தளவில் விநியோகிக்கப்படாத பட்சத்தில் அரசாங்கம் பொதுமக்களின் அதிருப்திக்குள்ளாகும் போக்கு அதிகரிக்கும். சர்வதேச கடன்வழங்குனர்களுடன் கடந்த அரசாங்கம் நடத்திய பேச்சுவார்த்தைகளும் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கையும் அரசாங்கம் தனக்கு அனுகூலமான முறையில் தந்திரோபாயத்தைக் கடைப்பிடிப்பதற்கு இடமளிப்பதாக இல்லை.

பேச்சுவார்த்தைகள் மூலம் கடனில் செய்யப்பட்ட குறைப்பு ஒட்டுமொத்த கடனில் சுமார் 20 சதவீதமேயாகும். இலங்கையைப் போன்று கடன் பிரச்சினையில் இருக்கின்ற நாடுகளினால் பெறப்பட்டுவந்திருக்கும் கடன் குறைப்புடன் ஒப்பிடும்போது இது கணிசமானளவுக்கு குறைவானதாகும். ஆர்ஜன்டீனா 2020 ஆம் ஆண்டில் 65 பில்லியன் கோடி அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு பிணைமுறிகளை மறுசீரமைப்பு செய்ததுடன் அடுத்த தசாப்தத்தில் திருப்பிச் செலுத்தவேண்டிய கடனில் ஐம்பது சதவீத குறைப்பையும் பெற்றுக் கொண்டது.

அரசாங்கத்துக்கு இருக்கும் உள்ளகப் பிரச்சினைகள் அரசியல் அதிகாரப் பதவி நிலைகளில் இருப்பவர்கள் ஆட்சிமுறைக்கு பெரும்பாலும் புதியவர்களாக இருப்பதன் விளைவாக வருபவையாகும். இலங்கையில் இருப்பதைப் போன்ற சிக்கலான நிலைவரங்களில் தீர்மானங்களை மேற்கொள்வதில் உள்ள சூட்சுமங்களுடன் அவர்கள் பரிச்சயமாகிக் கொள்வதற்கு காலம் செல்லும்.

இதே பதவி நிலைகளில் முன்னர் இருந்தவர்களின் சுயநலப்போக்கு மற்றும் ஊழல் நடைமுறைகளின் விளைவாக மூன்று வருடங்களுக்கு முன்னர் நாடு தாழ்ந்த நிலையை அடைந்தது. அதனாலேயே அரசாங்க அதிகாரத்தைக் கையாளுவதில் அறவே அனுபவமில்லாதவர்கள் தேர்தல்களில் அமோக வெற்றியைப் பெற்று ஆட்சிக்கு வரக்கூடியதாக இருந்தது.

ஆட்சிமுறைக்கு புதியவர்களான ஒரு அணியினரை வைத்துக் கொண்டு பொருளாதாரத்தை மீளமைக்கும் சவாலை எதிர்நோக்க வேண்டியிருப்பதே புதிய அரசாங்கத்தின் பெரிய பிரச்சினையாகும். கடந்த காலத்தில் அரசாங்க தீர்மானங்களை மேற்கொள்பவர்களின் ஊழல் நடவடிக்கைகளுக்கும் குறுகிய நலன்களுக்கு முன்னுரிமை கொடுப்பதில் அவர்கள் காட்டிய நாட்டத்துக்கும் அரச நிருவாகத்தில் இருந்தவர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்தது என்பது ஒரு துரதிர்ஷ்டவசமான யதார்த்தமாகும்.

அதனால் அரசாங்க இயந்திரத்துக்கு பொறுப்பாக புதிய நிருவாகிகள் அணியொன்றை நியமிக்க வேண்டிய அவசியத்தை புதிய அரசாங்க தலைவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அவர்களில் சிலர் தொழிலை கற்றுக்கொள்வதற்கு மற்றையவர்களை விடவும் கூடுதல் காலத்தை எடுக்கக்கூடும். அதன் விளைவாக குறுகிய காலத்தில் அரசாங்க இயந்திரம் பயனுறுதியுடைய முறையில் செயற்படவில்லை.

கிளீன் சிறிலங்கா செயலணியின் ஆரம்பக்கட்ட முன்முயற்சிகள் எதிர்பார்க்கப்பட்ட நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. அரசாங்க - தனியார் கூட்டுப்பங்காண்மை தொடர்பான அதன் கருத்துக்களை எந்தவிதமான கலந்தாலோசனை நடைமுறைகளும் இல்லாமல் குறிப்பிட்ட சில குழுக்கள் மீது திணிக்க முயன்றமையே அதற்கு காரணமாகும். அந்த குழுக்கள் இந்த முன்முயற்சிகளினால் பாதிக்கப்படுவதாக உணர்கின்றன.




முதல் இலக்குகளாக அமைந்திருக்கும் தனியார் பஸ் மற்றும் முச்சக்கரவண்டி உரிமையாளர்களும் சாரதிகளும் ஜனாதிபதி செயலணியினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை எதிர்த்திருக்கிறார்கள். சுற்றுச்சூழல் மாசடைதல் மற்றும் வீதிப் போக்குவரத்து ஆபத்துக்களுக்கு அவர்களே காரணம் என்று கருதப்படுவது குறித்து அவர்கள் விசனமடைந்திருக்கிறார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை தங்களது வாகனங்களை அழகுபடுத்துவதற்கும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை மேம்படுத்துவதற்கும் பணத்தை முதலீடு செய்திருக்கிறார்கள். அவர்களின் விடயத்தில் தற்போது அரசாங்கம் விட்டுக் கொடுப்புக்களைச் செய்வதற்கு இணங்கியிருக்கிறது. அதன் மூலமாக உத்தேச சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மூன்றுமாத காலஅவகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

கிளீன் சிறிலங்கா திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஆரம்பக்கட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாக தோன்றிய பிரச்சினைகளை ஆக்கபூர்வமான முறைகளில் கையாளுவதற்கு அரசாங்கம் சில புதிய அணுகுமுறைகளை தீர்மானித்திருக்கிறது. கிளீன் சிறிலங்கா செயலணியின் கோட்பாடு குறித்து கலந்துரையாடவும் கருத்துக்களை பெறவும் சிவில் சமூக அமைப்புக்களை அரசாங்கம் அழைத்திருப்பது அவற்றில் ஒன்று.

இது விடயத்தில் அரசின் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் செயலகம் மத்தியஸ்தராக செயற்பட்டு, ஜனாதிபதி செயலணியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு குறிப்பிட்ட சில சிவில் சமூக அமைப்புக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. அரசாங் கத்தின் பல முன்முயற் சிகளில் பங்கேற்பதற்கு சிவில் சமூகக் குழுக்கள் இது வரையில் அழைக்கப்படா ததை அடிப்படையாக வைத்து நோக்கும்போது இந்த முயற்சி ஒரு நேர்மறை யான அம்சமாகும்.

அரசாங்க இயந்திரம் மற்றும் தனி யார்துறையில் மாத்திரம் நம்பிக்கை வைத்து புதிய அரசாங்கம் தங்களை ஓரங்கட்டுகிறது என்ற ஒரு உணர்வு சிவில் சமூக அமைப்புக்களுக்கு ஏற்பட்டிருந்தது. இந்த அமைப்புக்களின் சுதந்திரத்தைப் பாதிக்கக் கூடிய ஒரு தொகுதி ஒழுங்கு விதிகளை அரசாங்கம் திடீரென்று கொண்டுவந்ததால் அந்த நேர்மறையான உணர்வு மேலும் வலுடைநதது.

ஜனநாயக ஆட்சிமுறை அமைப்பில் சிவில் சமூக அமைப்புக்கள் ஓர் அங்கமாகும். குறிப்பாக, இன, மத சிறு பான்மைச் சமூகங்கள், பெண்கள் மற்றும் மாறிய பாலின சமூகம் போன்ற ஓரங்கட்டப்படுகின்ற குழுக் களின் விவகாரங்களில் அரசாங்க மற்றும் தனியார்துறையினர் விட்டுச்சென்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில் சிவில் சமூக அமைப்புகள் முக்கியமான பங்களிப்பைச் செய்து வருகின்றன.

அதிகார துஷ்பிரயோகம் மற்றும் மனித உரிமை மீறல்களை கண்காணிக்கும் செயன்முறைகளின் ஒரு அங்கமாகவும் சிவில் சமூக அமைப்புக்கள் செயற்படுகின்றன.

> புதிய அரசாங்கத்தின் விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகளுடன் பொருந்திவரக்கூடியதாக கிளீன் சிறிலங்கா செயலணியின் திசைமாற்றங்கள் போன்று கடந்த காலத்தில் இருந்து வருகின்ற தலையீடுகளையும் மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும்.

சிவில் சமூக அமைப்புக்களுக்கும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்குமான செயற்பாட்டு [illegible] உலகம் பூராவும் தொடர்ச்சியாக ஆபத்துக்கு உள்ளாகியிருக்கிறது. இந்த அமைப்புககளை தங்களுக்கு பிரச்சினைகளைக் கொடுப்பவை என்றும் அசௌகரியமானவை என்றும் நோக்கும் அதிகாரத்தில் இருப்பவர்கள் செயற்பாடுகளை பெரும்பாலும் மெச்சுவதில்லை.

சிவில் சமூக அமைப்புக்கள் பல்வேறு காரணங்களுக்காக அவற்றின் சுதந்திரங்களை கட்டுப்படுத்துவதற்கான பெருவாரியான முயற்சிகளுக்கு முகங்கொடுத்து வந்திருக்கின்றன. போர்க் காலகட்டத்தின் போது அந்த அமைப்புக்களில் சிலவற்றின் மீது விடுதலை புலிகளுக்கு ஆதரவானவை என்றும் அரசாங்கத்தின் போர் நடவடிக்கைகளை மலினப்படுத்துபவை என்றும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

போர் முடிவுக்கு வந்ததன் பின்னரான உடனடிக் காலப்பகுதியில் தமிழ் மக்கள் மத்தியில் கிளர்ச்சி உணர்வுக்கு புத்துயிர் கொடுக்க முயற்சித்ததாகவும் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதன் மூலமாக சர்வதேச சமூகத்தின் தடைவிதிப்புகளை அரசாங்கம் எதிர்நோக்கக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கியதாகவும் இந்த சிவில் சமூக அமைப்புக்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

பணச்சலவை செய்யும் குற்றங்களை புரிவதன் மூலமாக அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் சர்வதேச சட்டத்துக்கு ஒரு அச்சுறுத்தலை தோற்றுவிப்பதாக தற்போது முறைப்பாடுகள் கூறப்படுகின்றன. அந்த நிறுவனங்கள் மீது அரசாங்கம் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதற்கு வழிவகுக்கும் புதியதொரு தொகுதி ஒழுங்குவிதிகளும் திடீரென்று கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

எவ்வாறெனினும், அரசாங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கிடைத்திருக்கும் வாய்ப்பு யதார்த்த நிலையைப் பற்றிய ஒரு நுணுக்கமான விளக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு வசதியாக அமைகிறது. சிவில் சமூக அமைப்புக்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாடு முறைப்படியாக அறிவிக்கப்படவில்லை. ஆனால், அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுடன் நேசமான ஒரு நிலைப்பாட்டை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்ற விருப்பத்தை ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க வெளிப்படுத்தியதாக கூறப்படுகிறது.

புதிய அரசாங்கத்தின் தலைவர்களும் நிருவாகிகளும் பிரச்சினைகளுடன் தங்களை பரிச்சயமாக்கிக் கொண்டு நாட்டை நிருவகிப்பதில் தங்களது விழுமியங்களையும் கோட்பாடுகளையும் பிரயோகிக்க ஆரம்பித்திருக்கும் நிலையில், இந்த நேர்மறையான உணர்வுகளும் நோக்கங்களும் தெளிவாக வெளிப்படுவதற்கு சிறுதுகாலம் செல்லும்.

அதேவேளை, புதிய அரசாங்கத்தின் விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகளுடன் பொருந்திவரக்கூடியதாக கிளீன் சிறிலங்கா செயலணியின் திசைமாற்றங்கள் போன்று கடந்த காலத்தில் இருந்து வருகின்ற தலையீடுகளையும் மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியில் அதிக உறுப்பினர் இருந்தால் அரசு விரைவாக கவிழ்ந்துவிடும்!

பனங்காட்டான்

இலங்கையின் மூத்த சிங்கள அரசியல் கட்சியான ஐக்கிய தேசிய கட்சி இரண்டாகப் பிளவுபட்டு ரணில் தலைமை, சஜித் தலைமை என்று சிதறுண்டு ஆட்சியைக் கைப்பற்ற முடியாத நிலையில் தள்ளாடுகின்றன.

இலங்கையின் இரண்டாவது சிங்களக் கட்சியாக உருவாகி, நெடுங்காலம் ஆட்சியைத் தங்கள் கட்டுப்பாட்டில் தக்க வைத்திருந்த சுதந்திரக் கட்சியும் இரண்டாகி, மகிந்த தலைமையில் உருவான பொதுஜன பெரமுன படுதோல்வி கண்டு எழும்ப முடியாத நிலையிலுள்ளது.

கோதபாயவின் ஜனாதிபதி பதவி விலகலால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு நியமனமான ரணில் விக்கிரமசிங்க, கடந்த வருட முற்பகுதியில் பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து தம்முடன் சேர்ந்து இயங்கியவர்களை இணைத்து புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கினர்.

அவ்வேளையில் சஜித் பிரேமதாச பலமான அணியாக இருந்ததால் ரணிலுடன் இணைந்து செயற்பட சம்மதிக்கவில்லை. நாடாளுமன்றில் பலமான எதிர்க்கட்சியாக தாங்கள் இருப்பதால் இரு கட்சி இணைப்பில் தலைமைப் பதவியை சஜித் கோரியதால் அவருடனான இணைப்பு முயற்சி முடிவடைந்தது. மறுதரப்பில் பொதுஜன பெரமுனவுக்கு பிராணவாயு ஏற்றி அதனை எழுப்புவதற்கு மகிந்த குடும்ப வாரிசான நாமல் ராஜபக்ச எடுத்த முயற்சியும் தோற்றுப்போனது.

இலங்கையின் இரண்டாவது பிரதமர் டட்லி சேனநாயக்கவின் மறைவுக்குப் பின்னர் அவரது வாரிசு அரசியல்வாதியாக ஐக்கிய தேசிய கட்சியைக் கைப்பற்ற முனைந்த அவரது பெறாமகன் ருக்மன் சேனநாயக்க அடுத்த சில வருடங்களில் அநாமதேயமானது ஒரு வரலாறு. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரும், சிங்கள மாற்று அரசியலின் தலைவருமான முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் அகால மறைவுக்குப் பின்னர் அவரின் அரசியல் வாரிசாக அறிமுகமான அநுரா பண்டாரநாயக்கவின் அரசியல் எதிர்காலமும் ருக்மன் சேனநாயக்க போன்று சூனியமானது.

இலங்கைக் குடியரசின் முதலாவது ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் குடும்ப வாரிசாக ஐக்கிய தேசிய கட்சியைப் பொறுப்பேற்ற அவரது பெறாமகன் ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெற முடியாமற் போனது மற்றொரு வரலாறு.

ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து வெளியேறி புதிய கட்சியை ஆரம்பித்த சஜித் பிரேமதாச இதுவரை வெற்றியாளராக அரசியலில் பரிணமிக்கவில்லை. முன்னாள் பிரதமரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணசிங்க பிரேமதாசவின் புதல்வர் என்ற ஒன்றைத் தவிர இவரது ஆளுமை பற்றிக் கூற வேறொன்றுமில்லை.

1970ல் வயதில் மிகக்குறைந்த எம்.பியாக அரசியலில் நுழைந்து, இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவாகி, தமது தாய்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியை பிளந்து பொதுஜன பெரமுனவை பிரசவித்த மகிந்த ராஜபக்சவின் அரசியல் வாரிசாக கடந்த வருட இரண்டு தேர்தல்களிலும் நாமல் ராஜபக்ச தம்மை நிரூபிக்கவில்லை.

இலங்கையின் அரசியல் முதலைகள் என்று காணப்பட்ட குடும்பங்கள் சீரழிந்த தேய்காலத்தை தங்களுக்கான வெற்றிக் காலமாக்கிய ஜே.வி.பி.யின் மறுவார்ப்பான தேசிய மக்கள் சக்தி, கடந்த வருட இரண்டு தேர்தல்களிலும் வெற்றி வாகை சூடி உலகை ஒரு தடவை தம்பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. இதனால் இலங்கையின் யுகபுருசராக அநுர குமார திஸ்ஸநாயக்க இன்று வெளிநாடுகளுக்கு பயணம் செய்கிறார்.

கடந்த பொதுத்தேர்தலின்போது அறுதிப் பெரும்பான்மையை (113 ஆசனங்கள்) மட்டுமே அநுர குமார அணி எதிர்பார்த்தது. தேர்தல் காலத்தில் உறுதியளிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு உருவாக்கம், சர்வ அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம், மாகாண சபைக்கான தேர்தல்களை நடத்துவது என்று வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றாது தப்புவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை (151 ஆசனங்கள்) தங்களுக்குக் கிடைக்கவில்லையென்று கூறி அதனைச் சாட்டாக வைத்து தேர்தல் வாக்குறுதிகளை தள்ளிவிடலாமென எதிர்பார்த்தவர்களுக்கு கிடைத்த எதிர்பாராத (விரும்பாத) வெற்றி இன்று பல நெருக்கடிகளை உருவாக்கி வருகிறது.



அரசியலில் அதீத பெரும்பான்மை என்பது எப்போதும் ஆபத்தானது என்பது வரலாறு கற்றுத் தந்துள்ள பெரிய பாடம். கடந்த காலங்களில் சிறீமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, கோதபாய ராஜபக்ச ஆகியோரின் கட்சிகள் தனித்து மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது போனதற்கு அவர்களுக்குக் கிடைத்த மூன்றிலிரண்டு பெரும்பான்மையே காரணம்.

எதனால் இவ்வாறு சரிவு நிலை ஏற்பட்டது என்பதற்கு பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ச கோதபாயவின் பரிதாப முடிவுக்குப் பின்னர் கொழும்பு டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்த கருத்து சகல அரசியல் கட்சிகளும் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று. "தேர்தலில் நாங்கள் அறுதிப் பெரும்பான்மையை பெற்றது இறுதியில் சாபக்கேடாக மாறியது" என்று இந்தச் செவ்வியில் பசில் ராஜபக்ச துணிந்து கூறியுள்ளார்.

"எப்போதாவது ஓர் அரசுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்தால் அது எதிர்பார்ப்பதைவிட விரைவாக கவிழ்ந்துவிடும். ஓர் அரசுக்கு அதிக உறுப்பினர்கள் (எம்.பிக்கள்) இருந்தால் அதனால் அரசுக்கு பல பிரச்சனைகள் ஏற்படும்" என்று அவர் தெரிவித்த கருத்து முன்னைய நாட்களில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெற்ற அரசுகள் மீளவும் ஆட்சிக் கட்டிலில் ஏற முடியாது போன காரணத்தைக் கூறுகிறது.

இதற்கு அடிப்படையானது ஊழல் என்று கூறுகிறார் பத்து வீதம் (கமிஷன்) என்று பட்டப்பெயர் பெற்ற பசில் ராஜபக்ச. தங்கள் கட்சிக்கு அப்போது மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்ததால் ஏற்பட்ட நெருக்கடி பற்றி அதே செவ்வியில் அவர் பின்வருமாறு கூறியிருந்தார்: "2020 தேர்தலின்போது எங்கள் கட்சி மூன்றிலிரண்டு பங்கு பெறப்போகிறதா என்று தேர்தல் ஆணையாளர் என்னிடம் கேட்டார். 150 இடங்களுக்குப் பதிலாக 130 - 135 இடங்கள் கிடைத்தால் மகிழ்ச்சி அடைவேன் என்று கூறினேன். ஏனெனில், முழுமையான அதிகாரம் வேறு பல பிரச்னைகளுக்கு இட்டுச் செல்லும். அதிகப்படியான அதிகாரக் குவிப்பு ஓர் ஆட்சிக்கு ஒருபோதும் உதவாது" என்பது இவரது பதிலாக இருந்தது.

"2020 தேர்தலின்போது எங்கள் கட்சி மூன்றிலிரண்டு பங்கு பெறப்போகிறதா என்று தேர்தல் ஆணையாளர் என்னிடம் கேட்டார். 150 இடங்களுக்குப் பதிலாக 130 - 135 இடங்கள் கிடைத்தால் மகிழ்ச்சி அடைவேன் என்று கூறினேன். ஏனெனில், முழுமையான அதிகாரம் வேறு பல பிரச்னைகளுக்கு இட்டுச் செல்லும். அதிகப்படியான அதிகாரக் குவிப்பு ஓர் ஆட்சிக்கு ஒருபோதும் உதவாது"
- பசில் ராஜபக்ச (மார்ச் 21, 2024)

கடந்த வருட பொதுத்தேர்தலில் அநுர குமார தரப்பும் பசில் தெரிவித்தது போன்று மூன்றிலிரண்டு பெரும்பான்மையை விரும்பவில்லை. ஆனால், ஆட்சி மாற்றத்தை விரும்பிய மகாஜனங்கள் விரும்பாத அந்த வெற்றியை தங்கள் வாக்குகளால் கொடுத்துவிட்டனர். அநுராவின் முதல் நூறு நாட்களை எண்ணி முடிப்பதற்குள்ளேயே இலைமறை காயாக பல நெருக்கடிகள் உருவாகியுள்ளன. படைத்துறை பிரதானிகள் மாற்றம், நீதித்துறையிலும் காவற்துறையிலும் அதிரடி மாற்றம், ஊழல் ஒழிப்பு நடவடிக்கை, அதிகார துஷ்பிரயோகம் சம்பந்தமான துரித விசாரணைகள் என்று ஒருபுறம் வேகம் காட்டப்பட்டாலும் நாளாந்தம் புதுப்பிரச்சனைகளை எதிர்கொள்ள நேருகிறது.

முடிந்தால் எங்கள் மீது நடவடிக்கை எடுங்கள் பார்க்கலாம் என்று முழக்கமிட்ட நாமல் ராஜபக்ச இப்போது சுருதி மாறி அரசியல் பழிவாங்கலுக்கு அநுர அரசு முயற்சிக்கிறது என்று குழறுகின்றார். வெளித்தோற்றத்தில் புதிய அரசு துரிதமாகவும், திறமையாகவும் செயற்படுவதாக படம் காட்டப்படுகிறது. அயல் உறவை மேம்படுத்த இந்தியாவுக்குப் பயணம், மாக்சிச கொள்கை ரீதியான நட்புறவை இறுக்கமாக்க சீனாவுக்குப் பயணம். முன்னைய ஆட்சிக் காலங்களில் இலங்கைக்கு வழங்கிய முழுக்கடனையும் இப்போது இலங்கைக்கான அன்பளிப்பாக மாற்றியுள்ளது இந்தியா. விட்டேனா நான் என்ற பாணியில் இலங்கைக்கு சீனா 3.7 பில்லியன் டாலரை முதலீடாக கொடுத்துள்ளது. அத்துடன் இலங்கை அரசின் திட்டங்களுக்கு தனது முழு ஆதரவையும் சீனா உறுதியளித்துள்ளது. சீனாவின் புகழீட்டிய வணிக உற்பத்தி நிலையங்கள் இலங்கையில் முதலீடு செய்ய கரிசனை தெரிவித்துள்ளன.

ஏற்கனவே இந்தியப் பிரதமர் மோடியை இலங்கை வருமாறு அழைப்பு விடுத்த அநுர, சீன ஜனாதிபதியையும் வருகை தருமாறு அழைத்துள்ளார். இரு நாடுகளும் இலங்கைக்கு புதியவையல்ல. பம்பாய் வெங்காயம், மைசூர் பருப்பு, காஷ்மீர் சேலை என்று இந்திய நகரங்களின் பெயர்களிலான பொருட்களுக்கு இலங்கையில் எப்போதுமே கிராக்கி. பல வருடங்களாக இலங்கை மக்களுக்கு கூப்பன் கடைகளில் வழங்கப்பட்ட வெள்ளைப் பச்சை அரிசி சீனாவை நினைவூட்டுவது. இலங்கையின் செய்து கொண்ட பண்டமாற்று ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலிருந்து றப்பர்களை இறக்குமதி செய்து, அதிலிருந்து உருவாக்கப்படும் வாகன ரயர்கள், றப்பர் பந்துகளை இலங்கைக்கு ஏற்றுமதி செய்து ருசி கண்ட நாடு சீனா.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் கேந்திர நிலையமாக இலங்கை விளங்குவதால் இரு நாடுகளுக்கும் இந்தியாவின் மீது எப்போதுமே அபார விருப்பம். இதனால் இரு நாடுகளும் நீயா நானா என்று இலங்கைக்கு உதவுவதில் போட்டியிடுமானால் அநுரவின் ஆட்சிக் காலத்தில் இடமும் வலமுமாக இவர்களே அமர்ந்து கொள்வார்கள்.

இப்போது அரசியல் தேனிலவை அனுபவித்து வரும் தேசிய மக்கள் சக்தி, தங்கள் சக்திக்கு உட்பட்டதும் அப்பால் உள்ளதுமான உலக நாடுகளின் உதவியால் நாட்டை பொருளாதார தோல்வியிலிருந்து மீட்க முனைகிறது. இதுவே பெரும்பான்மை அரசு எப்போதும் எதிர்பார்க்கும் பிரச்சனைகளுக்கு காரணமாகி விடுமோ எனவும் எச்சரிக்கை மணி அடிக்கிறது.

தமிழர் தரப்பும் இவ்வாறான நிலையில்தான் காணப்படுகிறது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவான பின்னர் வடக்கிலும் கிழக்கிலும் பேரெழுச்சி கண்ட காலம் இப்பொழுது வீழ்ச்சிக் காலமாக மாறிவருகிறது. தமிழர் தாயக தேர்தலில் 22 ஆசனங்களை வெற்றி கண்ட கூட்டமைப்பு இன்று தமிழரசுக் கட்சி என்ற பெயரில் 8 என்ற எண்ணிக்கைக்கு இறங்கியுள்ளது. தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உள்ளக முரண்பாடு இதன் எதிர்காலத்தை பெரும் கேள்விக்குறிக்கு முன்னால் நிறுத்துகிறது. கட்சியின் புனரமைப்பு, களைபிடுங்கல் என்ற பெயரில் தனிப்பட்ட கோபம் தீர்க்கும் இலக்கோடு முக்கியமானவர்களை இடைநிறுத்துவது, பதவி இறக்குவது, கட்சியிலிருந்து நீக்குவது வேகப்படுத்தப்படுகிறது.

நீதிமன்ற வழக்கின் தீர்ப்புகள் கிடைப்பதற்கு முன்னராக, நீண்ட காலம் இனவிடுதலைக்காகவும் கட்சியின் மீட்சிக்காகவும் உழைத்த தலைகளை பதம் பார்ப்பது கச்சிதமாக இடம்பெறுகிறது. ஒட்டகத்தின் வாலில் தொங்கிக் கொண்டிருப்பவர்களே தமிழரசுக் கட்சியின் எச்சங்களாக அங்குமிங்கும் எஞ்சியிருப்பர் போல் தெரிகிறது. பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் காலத்தில் கட்சி நாசமாக்கப்பட்டு விடலாமென்பதே பலரதும் இன்றைய அச்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை: சீனாவுடன் கையெழுத்தான ஒப்பந்தங்கள் கடன் பொறியில் சிக்க வைக்கப் போகிறதா?

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அதிகாரப்பூர்வ சீன விஜயத்தில், இலங்கைக்கு பாரிய நேரடி முதலீடுகள் கிடைத்துள்ளன.

சீன அதிபர் ஷி ஜினபிங்குக்கும் இலங்கை அதிபர் அநுர குமார திஸா நாயக்கவுக்கும் இடையில் ஜனவரி 16ஆம் தேதி நடந்த சந்திப்பை அடுத்தே இந்த முதலீடுகள் தொடர்பான உடன் படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இதன்படி, இலங்கையின் தென் பகுதியிலுள்ள ஹம்பாந்தோட்டையில் புதிய எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு, சினொபெக் நிறுவனம் ஆகிய வற்றுக்கு இடையில் இந்த உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க கடந்த 13ஆம் தேதி சீனாவுக்கு பயணமாகியிருந்தார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், கடந்த மாதம் தனது முதல் வெளிநாட்டு விஜயமாக இந்தியாவுக்கு சென்ற அநுர குமார திஸ ாநாயக்க, இரண்டாவது வெளிநாட்டு விஜயமாக சீனாவுக்கு பயணித்துள்ளார்.

சீனா சென்ற ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு, சீனாவில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சீன அதிபர் மற்றும் இலங்கை ஜனாதிபதி ஆகியோருக்கு இடையில் வியாழனன்று இருதரப்பு பேச்சு வார்த்தை இடம்பெற்றது.

அபிவிருத்தியின் புதிய யுகத்திற்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயார் என சீன அதிபர் அப்போது தெரிவித்துள்ளார்.





அத்துடன், நெருங்கிய நட்பு நாடு என்ற விதத்தில் சீனாவுக்கும், இலங் கைக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த சீன அதிபர், எதிர் காலத்தில் இலங்கையுடன் இணைந்து செயல்படத் தயார் எனவும் உறுதி வழங்கியுள்ளார்.

இரு நாட்டு தலைவர்களுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அப்போது, "இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும், சீன அதிபர் ஷி ஜின்பிங்குக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையின் போது இரு நாடு களுக்கும் இடையிலான பொருளாதார, கலாசார, அரசியல் தொடர்புகள் குறித்து மிக முக்கியமான விடயங்கள் கலந்துரை யாடப்பட்டன.

இந்த இருதரப்புப் பேச்சுவார்த்தைக் குப் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையில் 15 புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. இந்த 15 புரிந் துணர்வு உடன்படிக்கைகளும் எமது நாட்டின் பொருளாதாரத்திற்கும், கல்வி, ஊடகம், கலாசாரம் ஆகியவற்றுக்கும் மிக முக்கியமான," என்று தெரிவித்தார்.

மேலும், "இதன் ஊடாக இலங் கைக்கு பாரிய நன்மைகள் எதிர்காலத் தில் கிடைக்கும். சீன அரசின் ஒத்துழைப் புக்களை தொடர்ச்சியாக வழங்குவதாக சீன அதிபர் உறுதியளித்தார். சீனா தொடர்ச்சியாகப் பல்வேறு விதத்தில் உதவிகளை வழங்குவதாக எம்மிடம் உறுதியளித்தது. சீனாவுடனான உறவை இலங்கை மேலும் வலுப்படுத்தும் என உறுதி வழங்கப்பட்டது." என்று விஜித்த ஹேரத் குறிப்பிடுகிறார்.

சீனாவுடன் கைச்சாத்திடப்படும் உடன்படிக்கைகள் குறித்து, இலங்கை அரசாங்கம் கடந்த 6ஆம் தேதி இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானங்களை எட்டியிருந்தது.

இதன்படி, இலங்கை அரசு "ஒரே சீனா கொள்கையை" தொடர்ச்சியாகக் கடைப்பிடித்தல் என அமைச்சரவை தீர்மானித்திருந்தது.

"இலங்கை அரசு "ஒரே சீனா கொள் கையை" தொடர்ச்சியாகக் கடைப் பிடித்து வந்துள்ளதுடன், அதன்மூலம் சட்டரீதியான சீனாவாக மக்கள் சீனக் குடியரசை மாத்திரம் ஏற்றுக்கொள்வது டன், தாய்வான் சீனாவின் ஒரு மாநிலம் மாத்திரமே என ஏற்றுக்கொள்வதெனும் நிலைப்பாடாகும். இலங்கை அரசு குறித்த கொள்கையை அவ்வகையிலேயே தொடர்ந்தும் கடைபிடித்து அதற்கி ணங்க நடவடிக்கைகளை மேற்கொள்வ தற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை அமைச்சரவைக் கூட்டத் தில் எட்டப்பட்ட தீர்மானங்கள்:

சீன ஊடகக் குழுமம் மற்றும் இலங்கை சுற்று[illegible] பணியகத்திற்கு இடையிலான புரிந்து ணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடல்.

சீன சுங்கக் கட்டுப்பாட்டு நிறுவனத் தின் இடையீட்டில் இலங்கையிலிருந்து கோழி இறைச்சி சீனாவுற்கு ஏற்றுமதி செய்வதற்கான நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைய மேற்கொள்வதற்கு இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக் கையை கைச்சாத்திடல்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறியளவிலான மீனவர்களுக்கு 35.7 மில்லியன் யுவான் கள் செலவில் சீனாவினால் அவசர உதவிகள் வழங்கப்படுவதற்கான நடவ டிக்கைகளை ஆரம்பிக்கத் திட்டமிடுதல்.

இதன்படி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள வருமானம் குறைந்த மீனவர்களுக்கு மீன்பிடி வலை கள், பொருத்து வீடுகள் அரசி போன்ற உதவிகளை வழங்க இணக்கம் எட்டப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் சீன மக்கள் குடியரசு நிறுவனத்துக்கு இடையிலான புரிந்து ணர்வு உடன்படிக்கை கையொப்பமிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய தொலைக்காட்சி, தேசிய வானொலி இலங்கை ஊடக அமைச்சு, வரையறுக்கப்பட்ட ஐக்கிய பத்திரிகை கம்பனி ஆகியவற்றுக்கும், சீனாவின் தேசிய தொலைக்காட்சி, வானொலி, சீன சிங்குவா பத்திரிகை முகவர் நிறுவனம், சீன ஊடகக் குழுமம் ஆகியவற்றுக்கும் இடையில் பல உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படு வதாக இலங்கை அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருந்தது.

சீனாவின் எரிபொருள் முன்னணி நிறுவனமாகத் திகழும் சினொபெக் சர்வதேச பெற்றோலிய நிறுவனத்துடன், இலங்கை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு வியாழனன்று (16) உடன் படிக்கையொன்றைக் கைச்சாத்திட் டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கைக்கு நேரடியாக 3.7 பில்லியன் டாலர் வெளிநாட்டு முதலீடு கிடைக்க வுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிக்கிறது.

ஹம்பாந்தோட்டையில் நிர்மாணிக் கப்படவுள்ள எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் இரண்டு லட்சம் கொள்ளளவு கொண்ட எரிபொருள் தாங்கிகளைக் கொண்டுள்ளதுடன், அவற்றில் பெரும ளவை ஏற்றுமதி செய்யத் திட்ட மிடப்பட்டுள்ளது.

சீனாவிடம் இருந்து இலங்கைக்குக் கிடைத்த இந்தப் புதிய முதலீட்டின் ஊடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துவதுடன், ஹம் பாந்தோட்டையில் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்வாதாரத்தைப் [illegible] அரசாங்கம் தெரி விக்கிறது.

இந்த முதலீட்டின் நன்மைகள் மிக விரைவில் நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துப் பேசியபோது, அரச நிறுவனங்களை சீனமயப்படுத்தும் திட்டங்கள் இங்கே மறைமுகமாக காய் நகர்த்தப்படுவதாக மூத்த பத்திரிகையா ளரும், அரசியல் ஆய்வாளருமான அ. நிக்சன் தெரிவித்தார்.

"சீனா-இலங்கை உறவு என்பது மிக நீண்ட காலமானது. அநுர குமார திஸ ாநாயக்கவின் பதவிக் காலத்தில் அது மேலதிகமாக வருகிறது. இந்தியாவுடன் உறவைப் பேணும் தேவை அநுர குமாரவின் அரசுக்கு இருக்கின்ற அதே நேரம், சீனாவுடனும் உறவைப் பேணும் தேவை உள்ளது" என்கிறார் நிக்சன்.

அவரது கூற்றுப்படி, இம்முறை கடந்த அரசுகளை விட, இந்த அரசின் அணுகுமுறை சற்று வித்தியாசமாக, முதலீடுகளை மையமாகக் கொண்டதாக இருக்கிறது.

"அரச நிறுவனங்களை சீனமயப்படுத் தும் திட்டங்கள் இங்கே மறைமுகமாகக் காய் நகர்த்தப்படுகின்றன. அதில் ஒன்று தான் அரச ஊடகங்கள், சீன ஊடகங்க ளுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள். இதற்கான அங்கீகாரம் அமைச்சரவை யில் கடந்த வாரம் வழங்கப்பட்டது.

இப்போது ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுள்ளது. இதேபோல மேலும் பல அரச நிறுவனங்களும் ஒப்பந்தங்களைச் செய்து, வேலைத் திட்டங்களைப் பகிர்ந்துகொள்ளுவது, அறிவைப் பகிர்ந் துக்கொள்வது உள்ளிட்ட பல்வேறுப் பட்ட திட்டங்களுடன் வருகிறார்கள்" என்று குறிப்பிட்டார் அவர்.

அதோடு, இது இந்தியா இலங்கை யுடன் செய்துகொள்ளவிருக்கும் எட்கா உடன்படிக்கைக்கு எதிராகச் செல்வதா கவும் நிக்சன் கூறினார். "இந்தியாவுட னான எட்கா உடன்படிக்கையானது, தொழில்நுட்பம் சார்ந்ததாக உள்ளது. தொழில்நுட்பத் துறை சார்ந்தது என்பது மூலமாக அரச நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் இந்திய தொழில்நுட்ப முறைகள் வருவதற்கான வாய்ப்புகள் இருந்தன.

இதற்கான எதிர்ப்புகளை அப்போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்தபோது மக்கள் விடுதலை முன் னணி வெளியிட்டது. இப்போது தேசிய மக்கள் சக்தியாக அரசாங்கத்திலுள்ள நேரத்தில் எட்கா உடன்படிக்கையைக் கைச்சாத்திட வேண்டிய தேவை ஏற்பட் டுள்ளது. விரும்பியோ விரும்பாமலோ கைச்சாத்திட வேண்டிய தேவை உள்ளது," என்றார்.

மேலும், அதற்கு மாற்றீடாகத்தான் சீனாவுடன் இந்த ஒப்பந்தங்கள் கைச் சாத்திடப்படுகின்றதோ என்ற ஐயப்பாடு எழுந்திருப்பதாகக் கூறுகிறார் நிக்சன்.

"ஒரு பக்கம் இந்தியாவிடமும், மறுபக்கம் சீனாவிடமும் நாட்டைக் கையளிக்கின்ற ஒரு நிலைமைக்கு தேசிய மக்கள் சக்தி அரசு சென்றுள்ளது. கடந்த ஆட்சியாளர்கள் முற்று முழுதாக நாட்டை இந்தியாவிடமோ அல்லது சீனாவிடமோ தாரை வார்க்கும் திட்டங்களுக்குப் போகவில்லை. இது வித்தியாசமான அணுகுமுறையாக இருக்கிறது" என்றும் அ.நிக்சன் தெரிவித் தார்.

வெளிநாட்டு முதலீடுகளின் ஊடாக முறையான ஏற்றுமதி உற்பத்திகளை ஊக்குவிக்கும் திட்டங்களை மேற் கொண்டு, அந்த முதலீடுகளைச் சரியான முறையில் கையாளும் பட்சத்திலேயே, எதிர்காலத்தில் கடன் பொறிக்குள் சிக்காது முறையாக பொருளாதாரத்தை

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வியுக்தியார் பதில்கள்

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** யாழ்ப்பாண கலாச்சார மண்டபத்தின் பெயரை திருவள்ளுவர் கலாச்சார மண்டபம் என்று பெயர் மாற்றியிருக்கிறார்களே. யாழ்ப்பாணம் என்ற பெயரே அவர்களுக்கு வெறுப்புக்குரிய பெயராக மாறி விட்டதோ?

**வியுக்தியார்:** அப்படியொரு மண்டபத்தை கட்டித் தருவதற்கு இந்தியா முன்வந்தபோது, அது யாழ்ப்பாண மக்களுக்காக கட்டப்படவிருக்கின்றது என்றுதான் இந்தியப் பிரதமர் மோடிஜி கூடக் கூறியிருந்தார். அதனை கட்டி முடித்துவிட்டு யாழ்ப்பாண மாநகர சபையிடம் கையளிக்க தயாரானபோது, அதனை பராம ரிக்கின்ற செலவை ஈடுசெய்ய, யாழ்ப்பாண மாநகரசபை யால் முடியாது என்பதால் அது அந்த மண்டபத்தை பொறுப்பேற்க மறுத்துவிட்டது. அதனை பொறுப் பேற்று பின்னர் அதனை எவ்வாறு பராமரிப்பது என்பதை கண்டறிந்திருக்கலாம். அதனை செய்யாது விட்டதால், யாழ்ப்பாண மக்களுக்காக கட்டப்பட்ட அந்த நிலையம் இன்று பெயர்தான் மாற்றப்பட்டி ருக்கின்றது. இனி அதன் உரிமமும் மாறுகின்றதோ என்பதைத்தான் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். ஒரு கலாச்சார மண்டபத்தையே நிர்வகித்துக்காட்ட முடி யாத நமது அரசியல்வாதிகள்தான் சமஷ்டி என்றும் சுய நிர்ணயம் என்றும் கதையளந்து கொண்டிருக்கின்றார் கள்.

---

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவராக ரெலோ தலைவர் செல்வம் அடைக்கல நாதன் நியமிக்கப்படவுள்ளார் என ஊடகங்களில் வெளி யாகிய செய்தி தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள தமிழ் தேசியக்கட்சியின் தலைவர் என். சிறிகாந்தா, கூட்டணிக்கு ஒற்றைத் தலைமை ஏற்படுத்துவது குறித்து தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை என்றும், இனி மேலும் அப்படியான தீர்மானம் எட்டப்படமாட் டாது என்றும் தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** ஒரு கட்சி பலமாக - இருக்கவேண்டும் என்றால் ஒற்றைத் தலைமை மட்டுமல்ல, சரியானதை - சரியான நேரத்தில் உறுதியுடன் முடிவெடுக்கக்கூடிய ஒருவரை தலைவராகவும் கொண்டிருக்க வேண்டும். அப் படி வைத்திருக்கக்கூடிய தலைவரா செல்வம் என்பதல்ல பிரச்சினை, ஏன் அப்படி ஒற்றைத் தலைமையை அவர் கள் விரும்பவில்லை என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. ஒருவரை ஒருவர் இவர்களே இவர்களை நம்ப வில்லையோ தெரியவில்லை. அப்படி அவர்களே மற்ற வரை நம்பாதபோது தமிழ் மக்களை மட்டும் அவர்களை நம்பி வாக்களிக்க கேட்பதுதான் புரியவில்லை. அதற் காக நான் அவர்தான் ஒற்றைத் தலைமைக்கு சரியானவர் என்று வாதிடுவதாக நினைத்துவிடாதீர்கள்.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸிற்கும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக்குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரனுக்கு மிடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற் றுள்ளது. இச்சந்திப்பில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனும் பங் கேற்றிருந்தார். இப்படி நமது தலைவர்கள் தூதுவர்க ளைச் சந்திப்பதால் தமிழ் மக்களுக்கு ஏதேனும் பயன்வரும் என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** இருவரும் அண்மையில் கனடாவிற்கு சென்று திரும்பியிருந்தார்கள் அல்லவா, அங்குசென்று வர விசா கொடுத்ததற்கு நன்றி சொல்ல போயிருப்பார் களோ என்னவோ?. இப்படி சந்திப்பதால் பயன்வரும் என்றால் நமது சுமந்திரனும்தான் தினமும் ஒரு தூது வரை முன்னர் சந்தித்தாரே. நமக்கு ஏதேனும் நன்மை வந்ததா என்பது தெரியவில்லை. தமிழர்களுக்கு நன்மை வருகின்றதோ இல்லையோ, ஊடகங்களுக்கு தீனி கிடைக்கின்றதுதானே. ஒரு தடவை இந்த கனடா தூது வரை சந்தித்தபோது அவர் நமது மக்கள் பற்றி தெரி வித்த பல விடயங்கள் எமக்கே தெரியாதவை. அவ்வளவு தூரம் நமது பிரச்சினைகளை அவர் அறிந்துவைத்திருக்கி றார். சிலவேளை அவரிடமிருந்து கிடைத்த தகவல்கள் நமது அரசியல்வாதிகளுக்கு உதவலாம்.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**



**கேள்வி:** இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை தொடர்பில், தமிழக முதலமைச்சருடன் பேச்சு நடத்த, சந்தர்ப்பம் கோரியுள்ள தாகவும், வெகுவிரைவில் பேச்சு நடத்த எதிர்பார்ப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளாரே. அந்தச் சந்திப்பு நடந்தால் அந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணப் படலாம் என்று நம்புகின்றீர்களா?

வியுக்தியார்: இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினை என்பது வெறுமனே தமிழக மீனவர்களுடைய பிரச் சினை அல்ல. அது இரண்டு நாடுகள் சம்பந்தப்பட்டது. தமிழக மீனவர்களோ அல்லது தமிழக அரசோ இன்று வரை தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவது பற்றியோ அல்லது சட்டவிரோத இழுவைமடி மீன்பிடியை பயன் படுத்துவது பற்றியோ வாய் திறக்கவில்லை. இந்நிலை யில் இதனை தடுக்க மத்திய அரசுதான் முயற்சிக்கவேண் டும். யுத்தம் நடந்த காலங்களில் நமது கடல் முழுவதை யும் கண்காணித்து, இலங்கைக் கடற்படைக்கு தகவல் வழங்கியவர்கள் இந்திய கடற்படையினர் என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. அவர்கள் நினைத்தால், தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதை முற்றாக தடுக்கலாம். தமிழக மீனவர்களை எல்லை தாண்ட வேண்டாம் என்று தமிழக அரசியல்வாதிகள் கேட்கப் போவதில்லை என்பதுதான் யதார்த்தமானது. நமது சிறிதரன் எம்.பி. தமிழக முதல்வரை சந்திப்பதில் தவறில்லை. முயன்று பார்க்கட்டும், ஆனால் அவரிடம் சந்திப்புக்கு கேட்டுவிட்டு காத்திருக்கிறார் என்பது தெரிகின்றது. ஒரு காலத்தில் நமது தமிழ் தலைவர்களை சந்திப்பதையே கருணாநிதி, முதல் எம்.ஜி.ஆர். வரை பெருமையாக நினைத்து சந்தித்த காலம் ஒன்று இருந் தது. ஆனால் இன்று நமது தலைவர்கள் அவர்களைச் சந்திப்பதற்காக காத்திருக்க வேண்டியதாகி விட்டது.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**



**கேள்வி:** தமிழ்நாட்டில் நடைபெற்ற நிகழ்வு ஒன் றுக்கு சென்ற பாராளுமன்ற உறுப் பினர்களான செல்வம் அடைக்கலநாதன், இ.சாணக்கியன், முன் னாள் நாடாளு மன்ற உறுப்பினராகிய எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டா லினை சந்தித்தனர். இதன் போது இலங்கை மீனவர்க ளது பிரச்னைகள் குறித்து பேசாமல் முதலமைச்சருடன் சிரித்துக்கொண்டு வெறு மனே செல்பி எடுத்தமை வருத் தம் அளிப்பதாக யாழ். மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தின் உப தலைவர் ரட்ணகுமார் தெரிவித்திருந்தாரே. அவரது கோபம் நியாயமானதுதானே?

**வியுக்தியார்:** அவரது கோபம் நிச்சயமாக நியாய மானதுதான். ஆனால் அங்கு என்ன நடந்தது என்பதை யும் அல்லவா அவர் தெரிந்துகொண்டு கருத்துச் சொல்லியிருக்கவேண்டும். சென்னையில் நடந்த மாநாடு ஒன்றுக்காக அவர்கள் சென்றிருந்தனர். அந்த மாநாட்டில் தமிழக முதல்வர் ஸ்டாலினும் கலந்து கொண்டார். அவர் மாநாட்டு மண்டபத்திற்குள் வந்த போது அங்கிருந்த பலர் அவருடன் செல்பி எடுக்க விரும்பியபோது அவரும் தாராளமாக எடுக்க அனுமதி வழங்கினார். அதனைப் பார்த்த நமது எம்.பி.க்களும் கூட்டத்தோடு கூட்டமாக முதல்வருடன் செல்பி எடுத்த னர். அந்த படங்களை அவர்களின் ‘விசிலடி” கோஷ்டி கள் முதலமைச்சரை அவர்கள் சந்தித்ததாக சமூக வலைத்தளங்களில் பதிவிட்டார்கள் அவ்வளவுதான். அவர் இவர்களுடன் செல்பி எடுக்கும்போது இவர்கள் யார் என்பதையே அவர் அறிந்திருப்பாரோ தெரியவில் லையே. இந்த லட்சணத்தில் மீனவர் சங்க பிரதிநிதியோ, அவரைச் சந்தித்தபோது மீனவர் பிரச்சினை பற்றி பேச வில்லை என்று குறைசொல்வது அவர்கள் சந்தித்ததாக கிளப்பிய புரளியை நம்பிவிட்டதாக அல்லவா தெரிகின் றது.

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசில் தமிழ் மக்களுக்கான அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள் வதற்கான அதிகாரப் பகிர்வுக்குரிய சாத்திய நிலை மைகள் மறைந்து வருகின்றன என்று குறிப்பிட்டுள்ள இலங்கையின் மூத்த இராஜதந்திரி கலாநிதி தயான் ஜயதிலக்க, கடந்த காலத்தில் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்குச் செய்துள்ள பத்து பாவங்களையும் பட்டியலிட்டுச் சுட்டிக்காட்டியுள்ளாரே. படித்தீர்களா?

**வியுக்தியார்:** இந்த தயான் ஜயதிலக பற்றி வியுக்தியா ருக்கு பல விமர்சனங்கள் உண்டு. ஆனால், அவர் நீண்ட காலத்திற்கு பின்னர் உண்மையை, சரியாகப் பேசியிருக் கிறார் என்று நினைக்கின்றேன். வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபை இயங்கியபோது அதன் ஆட்சி யில் இருந்த ஈபிஆர்எல்எவ் கட்சி மூன்று சமூகத்தவர்க ளும் இணைந்திருக்க வேண்டும் என்பதற்காக தமது அமைச்சரவையில் ஒரு சிங்கள சமூகத்தவரையும் நிய மிக்க நடவடிக்கை எடுத்தார்கள். அப்போது ஈபிஆர் எல்எவ் கட்சியால் அமைச்சராக நியமிக்கப்பட்டவர் இந்த தயான் ஜயதிலக்க. நமது அரசியல் பற்றியும் நல்ல தெளிவாக அறிந்துவைத்திருப்பவர். அவர் சொல்கின்ற பத்து பாவங்களையும் நான் மட்டுமல்ல, நமது அரசி யல்வாதிகளும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகின் றேன். மாகாண சபைகளையும் தமிழ் மக்கள் இழக்கப் போகிறார்கள் என்ற அவரது எச்சரிக்கையைப் படித்து விட்டு நமது அப்புக்குட்டி அண்ணர் சொன்னதுதான் ஞாபகத்திற்கு வருகின்றது. ‘பட்டுவேட்டிக்கு ஆசைப் பட்டு தமிழர்கள் கோவணமும் இல்லாமல் நிர்வாண மாக நிற்கப்போகிறார்கள்” என்ற அப்புக்குட்டியரின் வாக்கியம் நகைச்சுவையாக இருந்தாலும் ஒவ்வொரு தமிழர்களும் ஆழமாக யோசிக்கவேண்டிய கருத்து.

---

**இரா.ரூபன்,**
**செட்டித்தெரு, நல்லூர்**



**கேள்வி:** ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து செயற்பட முன்வரும் தரப்பினருடன் சேர்ந்து எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலை எதிர் கொள்ளத் தயாராக இருப்பதாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித் துள்ளாரே. அதன் அர்த்தம் என்ன என்று புரிய வில்லையே?

**வியுக்தியார்:** ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் உயர்மட்ட தலைவர்கள் கூட்டம் வவுனியாவில் நடக்க விருக்கின்றது என்ற செய்தியைப் பார்த்ததுமே, இப்போ தாவது கடந்த தேர்தல் தேல்வியைப்பற்றி ஆராய முடி வெடுத்திருக்கிறார்களே என்று நினைத்தேன். ஆனால் கூட்டம் முடிவடைந்த பின்னர்தான் தெரிந்தது அவர் கள் இன்னமும் ‘பழைய’ உலகத்தில்தான் இருக்கிறார்கள் என்று. கூட்டம் முடிவடைந்த பின்னர் கூட்டத்தில் என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதை அறிய அங்கு சென்றிருந்த ஊடகவியலாளர் ஒருவருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அவன் சொன்ன தகவலை தரலாம் என்று நினைக்கின்றேன். ‘கட்சியின் தலைமைகளில் ஏதேனும் மாற்றம் நடந்ததா? இளை ஞர்களிடம் கட்சியை ஒப்படைப்பது குறித்து ஏதாவது முடிவெடுத்தார்களா?” என்று கேட்டதற்கு அவர் சொன்னார்: ‘கட்சிகளில் இளைஞர்கள் இருந்தால் தானே பொறுப்புக்களை ஒப்படைப்பதற்கு என்றுதான் சொல்ல நினைத்தேன். ஆனால் அதைவிட முக்கியமா னது அதன் தலைவர்கள் தங்களை இப்போதும் இளை ஞர்கள் என்றுதானே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்” என்றார். இனி உங்கள் கேள்விக்கு வருகிறேன். தங்க ளோடு இணைந்து செயற்பட என்றால், தங்களை விட சிறிய குழுக்களோடு என்றுதான் புரிந்துகொள்ளவேண் டும். நாங்கள் மற்றவர்களோடு இணைந்து செயற்பட தயாரர் என்றால் தங்களை விட பெரிய கட்சிகளோடு என்று அர்த்தம். இப்போது புரிந்திருக்குமே அவர்கள் யாருக்கு அழைப்பு விடுக்கிறார்கள் என்று?

---

**க.யோகபாலன்**
**செல்லர் வீதி, நல்லூர்**

**கேள்வி:** இலங்கையில் நீண்ட காலமாக நடத்தப் படாமல் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை மிக விரைவாக நடத்தி தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறை வேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநிலப் பிரிவு இலங்கை அரசாங் கத்திடம் வலியுறுத்திக் கேட்டிருக்கிறதே?

**வியுக்தியார்:** அவர்களுக்கு இன்னமும் ஈழத்தில் தமிழ் மக்கள் பற்றியோ அவர்களின் அரசியல் பற்றியோ எது வும் தெரியாது என்றுதான் நினைக்கின்றேன். இந்த மாகாணசபைகளை இல்லாமல் செய்துவிட்டால், தாங் கள் சமஷ்டியை எடுத்துவிடுவோம் என்று நமது முன் னணி கூறியிருப்பதை அவர்கள் இன்னமும் அறிய வில்லைப் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தாராளவாதத்தின் நெருக்கடியை பிரதிபலிக்கும் ஜஸ்ரின் ரூடோவின் எழுச்சியும் வீழ்ச்சியும்!

உலகின் முற்போக்கு அடையாளச் சின்னம் என்ற வகையில் ஜஸ்ரின் ட்ரூவோவின் எழுச்சியும் வீழ்ச்சியும் பொதுவில் தாராளவாதத்தின் நெருக்கடியைப் பிரதிபலித்து நிற்கிறது. கனடாவின் பிரதமராக மூன்று பதவிக்காலங்களில் ஒரு ஒன்பது வருடங்கள் கனடாவின் பிரதமராக அதிகாரத்தில் இருந்த பிறகு பதவியில் இருந்து விலகுவதாக ட்ரூடோ ஜனவரி 6 ஆம் திகதி அறிவித்தார்.

2015 ஆம் ஆண்டில் கனடாவின் அரசியலில் முக்கிய ஆளுமையாக எழுந்த ட்ரூடோ லிபரல் கட்சிக்கு தலைமைதாங்கி தேசியத் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார். அதுவே அவரது செல்வாக்கின் உச்சமாகவும் அமைந்தது.

ஜஸ்ரின் ட்ரூடோவின் தந்தை பியறி எலியட் ட்ரூடோ 15 வருடகாலமாக கனடாவின் பிரதமராக அதிகாரத்தில் இருந்தவர். வசதிவாய்ப்புகள் மற்றும் அதிகாரத்தின் ஒரு பிள்ளையாகப் பிறந்த ட்ரூடோ உலகின் தாராளவாத உயர்வர்க்கத்தின் காதுகளுக்கு இனிமையாக இருக்கக்கூடிய உரைகளை ஆரவாரத்துடன் நிகழ்த்தினார். ஆனால், நாட்டு மக்களின் மனநிலைகளை பற்றிய அவரின் உணர்திறன் மிகவும் பரிதாபமானதாக இருந்தது.

அவரின் உறுதியற்ற தாராளவாதம் தேசிய கட்டுப்பாடு இல்லாத தேசிய அரசாங்கக் கொள்கைகளாக உருமாற்றம் அடைந்த நிலையில் கனடியர்கள் அவருக்கு எதிராகத் திரும்பவே லிபரல் கட்சியின் செல்வாக்கு அதன் வரலாற்றிலேயே மிகவும் கீழ்மட்டத்துக்கு இப போது (15 சதவீதம்) இறங்கியது. அவரின் நிதிக் கொள்கை பழமைவாதிகளையும் மிதவாதிகளையும் சீற்றமடைய வைத்தது. அவர் அங்கீகரித்த பெருந் தன்மையான குடிவரவுக் கொள்கை சனத் தொகையில் அதிகரிப்பை ஏற்படுத்தி வீட்டுவசதி, சுகாதாரப் பராமரிப்பு, தொழில் வாய்ப்புகள் மற்றும் வேதனங்களில் நெருக்கடியை ஏற்படுத்தியது.



அவரின் கலாசாரத் தாராளவாதம் கனடிய அரசியலின் மையத்துக்கு தொலைவானதாக இருந்தது. அதிருப்தியின் சமிக்ஞைகள் பொதுப் போராட்டங்களாகவும் விமர்சனங்களாகவும் வெளிப்படத் தொடங்கியபோது கடுமையான அரச நடவடிக்கைகளை நாடியதுடன் தன்னை விமர்சித்தவர்களை நிராகரித்தார்.

தனது வெளியேற்றம் லிபரல் கட்சியின் வீழ்ச்சியை தடுக்கும் என்று நம்புவதாக ட்ரூடோ கூறினார். ஆனால், அவரது நம்பிக்கை பெருமளவுக்கு மிகைப்பட்டதாக தெரிகிறது. ஆனால், ட்ரூடோவுக்கு பின்னரான கனடாவினால் அமெரிக்கா மற்றும் இந்தியா உட்பட முக்கியமான பங்காளி நாடுகளுடனான உறவுகளைச் சீர்செய்யக்கூடியதாக இருக்கும் என்று நம்பலாம்.

ட்ரூடோவுக்கு பதிலாக புதிய தலைவரை லிபரல் கட்சி தெரிவுசெய்வதற்கு அல்லது அதன் சிறுபான்மை அரசாங்கம் வீழ்ச்சியடைந்து புதிய தேர்தல் நடத்தப்படுவதற்கும் சில மாதங்கள் செல்லலாம். பியறி பொயிலிவெயர் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சியின் மக்கள் செல்வாக்கு கடுமையாக அதிகரித்து வருகிறது. பொதுமக்களின் மனநிலையில் இன்னொரு மறுதலையான மாற்றம் ஏற்படாவிட்டால், தேர்தல் நடத்தப்படும்போது கன்சர்வேட்டிவ் கட்சி மாபெரும் வெற்றியைப் பெறும் என்று தெரிகிறது.

ட்ரூடோவுக்கு பிறகு பிரதமராக வருபவர் இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான உறவுகளைச் சீர்செய்ய உதவக்கூடும். கனடாவில் சீக்கியத் தீவிரவாதிகளின் தீயநோக்குடனான செயல்களுக்கு துணை போவதற்கு ட்ரூடோ எதிர்நோக்கிய நிர்ப்பந்தம் அவரது பதவிக் காலத்தில் இயல்புமீறிய சூழ்நிலைக்கு வழிவகுத்தது.

கனடாவில் காலிஸ்தான் செயற்பாட்டாளர் ஒருவரின் கொலையில் இந்தியாவின் ஏஜண்டுகளுக்கு தொடர்பிருப்பதாக சந்தேகித்து இந்தியாவுடனான உறவுகளைச் சீர்கெடச் செய்தன் மூலமாக ட்ரூடோ தனது இராஜதந்திர ஆற்றலையும் ஒரு மதிப்பார்ந்த தலைவர் என்ற பெயரையும் தரந்தாழ்த்திக் கொண்டார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெறுவதற்கு வாய்ப்பில்லை என்று பகிரங்கமாக கருத்து வெளியிட்டு ட்ரூடோ விவேகமற்ற முறையில் நடந்து கொண்டார். 2015 ஆம் ஆண்டில் பெரும் ஆரவாரமான கொண்டாட்டங்களுடன் பதவிக்கு வந்த ட்ரூடோ இப் போது வெளியேறியதற்காக எவரும் அழுததாக தெரியவில்லை.

(தி இந்து)

# கிளீன் சிறீலங்கா உண்மையில் அர்த்தமுடைய செயல்திட்டமாக அமைய வேண்டுமானால்...!

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்ததை தொடர்ந்து மூண்ட சர்ச்சைக்கு மத்தியில் கருத்து தெரிவித்த திசாநாயக்க, தமிழ் மக்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்கு 13ஆவது திருத்தம் தீர்வாக அமையும் என்று நம்பினால் அந்த திருத்தம் தொடர்பில் தேசிய மக்கள் சக்திக்கு பிரச்சினை இல்லை என்று கூறினார். அரசியலமைப்பில் நீண்டகாலமாக இருக்கும் அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்று இன்றைய பிரதமரும் அன்று கூறினார். ஆனால், விக்கிரமசிங்கவின் முயற்சிக்கு தென்னிலங்கை தேசியவாத சக்திகள் மத்தியில் எதிர்ப்பு வலுவடைந்தையடுத்து இருவரும் அதைப் பற்றி பேசுவதை கைவிட்டு விட்டனர்.

ஜனாதிபதியாக வந்த பிறகு பொதுவில் அவர் தேசிய இனப்பிரச்சினை குறித்தோ அல்லது 13 வது திருத்தம் குறித்தோ பேசுவதை திசாநாயக்க தவிர்த்துவருகிறார். மூன்று வருடங்களுக்கு பிறகு முன்னெடுக்கப்பட விருப்பதாக அரசாங்கம் கூறுகின்ற புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன் முறைகளின் போது 13 வது திருத்தத் துக்கு என்ன கதி நேருமோ எவரும் அறியார். ஆனால், இனப்பிரச்சினையை அலட்சியப்படுத்தினால், எந்த அரசிய லமைப்புச் சீர்திருத்தத் திட்டத்துக்கும் நியாயபூர்வத்தன்மையோ அல்லது பொருத்தப்பாடோ இருக்கப்போதில்லை.

ஆனால், தற்போதைய உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு இசைவாக தங்களது முன்னைய கொள்கைகளிலும் அணுகுமுறையிலும் பெரும் மாற்றங்களைச் செய்திருப்பதாக பெருமையாகக் கூறிக்கொள்ளும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் தேசிய இனப்பிரச்சினைக் கான அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் தங்களது கடும் போக்கான நிலைப்பாடுகளை தளர்த்துவதில் மாத்திரம் ஏன் விதிவிலக்காக நடந்துகொள்கிறார்கள்? இது விடயத்தில் கடும்போக்கு சிங்கள தேசியவாத அரசியல் சக்திகளுக்கும் தங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் தான் விளக்கவேண்டும்.




புதிய அரசியல் கலாசாரத்தையும் தார்மீகப் பண்புகள் மற்றும் நெறிமுறைகளைக் கொண்ட ஒரு சமுதாயத்தையும் உருவாக்குவதற்கு உறுதிபூண்டிருக்கும் ஜனாதிபதி திசாநாயக்க அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான தனது கட்சி யின் கோட்பாட்டுப் பிடிவாதத்தை மாற்றுவதற்கு முன்வராமல் மக்களின் சிந்தனையில் எவ்வாறு பண்புரீதியான மாற்றத்தைக் கொண்டுவரப் போகிறார்? அவர் கூறும் பண்பு மாற்றத்தின் மட்டுப்பாடுகள் எவை?

1987 ஜூலை இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கையை ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) எதிர்த்து ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தாலும் கூட, ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் பிரவேசித்த பிறகு தேர்தல்களில் போட்டியிட்டு மாகாணசபைகளில் அங்கம் வகித்தது. இந்தியாவினால் திணிக்கப்பட்டதாகக் காரணம் கூறி 13 வது திருத்தத்தை ஜே.வி.பி. எதிர்த்திருந்தாலும், தற்போது இந்தியாவுடன் நெருங் கிய உறவுகளை வளர்த்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் மாத்திரம் விட்டுக்கொடுப்பைச் செய்வதற்கு தயக்கம் காட்டுவது ஏன்?

தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் நம்பகத்தன்மையைக் கொண்ட ஒரே அரசியல் தலைவராக இன்று விளங்கும் ஜனாதிபதி திசாநாயக்க அவர்கள் மத்தியில் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வ மான அரசியல் அபிலாசைகளுக்கும் அதிகாரப் பரவலாக்கத்துக்கும் எதிராக நிலவும் ஆழமான எதிர்ப்பு ணர்வைத் தணிக்கு முகமாக அவர்களின் மனங்களை வென்றெடுக்கக்கூடிய ஒரு தகு நிலையில் இருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. முன்னைய ஜனாதிபதிகளைப் போலன்றி வரலாறு தந்திருக்கும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி அவர் அந்த பணியைச் செய்ய முன்வரா விட்டால் வேறு எவரும் அண்மைய எதிர்காலத்தில் அதைச் செய்வதற்கு வாய்ப்பில்லை.

புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு முன்னரான மூன்று வருடகாலப்பகுதியில் மாகாணசபைகளை ஒழிக்கப் போவதில்லை என்று வெறுமனே கூறிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை. மாறாக விரைவாக மாகாணசபை தேர்தல்களை நடத்தி 13 வது திருத்தத்தின் அதிகாரங்களைச் சாத்தியமானளவுக்கு நடைமுறைப் படுத்துவதற்கு ஜனாதிபதி அரசியல் துணிச்சலை வரவழைத்துக் கொண்டால், இலங்கைச் சமூகத்தில் அவரும் அரசாங்கமும் ஏற்படுத்த நாட்டம் கொண்டிருக்கும் பண்புரீதியான மாற்றத்தை நோக்கிய செயன்முறைகளுக்கு உத்வேகத்தைக் கொடுப்பதாக நிச்சயம் அமையும். இனவாத அரசியல் மீண்டும் தலையெடுக்காமல் தடுக்கவும் அது பெருமளவுக்கு உதவும்.

தமிழ்க்கட்சிகள் அந்த திருத்தத்தை விரும்புகிறார்களா இல்லையா என்பதைப் பற்றி ஜனாதிபதி கவலைப்படத் தேவையில்லை. அரசாங்கம் நடந்து கொள்கின்ற முறையில்தான் தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களிடமிருந்து மேலும் அந்நியப்படுமா அல்லது இல்லையா என்பது தங்கியிருக்கிறது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் தென்னிலங்கையின் உணர்வுகளில் எந்த விதமான தளர்வும் இல்லாமல் பண்பு நிலை மாற்றம் மற்றும் தார்மீக விழுமியங்கள் பற்றி பேசுவதில் அர்த்தமில்லை. அத்துடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சகல இனங்களையும் சமமாக மதிக்கிறது என்றும் இனவாத அரசியலை அனுமதிக்கப் போவதில்லை என்றும் கூறிக்கொண்டிருந்தால் மாத்திரம் சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடப்போவதில்லை.

சிறிலங்காவை உண்மையாகவே "கிளீன்" செய்வதாக இருந்தால் இனப் பிரச்சினையில் பெரும்பான்மைச் சமூகத்தின் மனநிலையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுவதற்கு ஜனாதிபதி தன்னை அர்ப்பணிக்க வேண்டும். கிளீன் சிறிலங்கா முழுமையானதாக அமைவதற்கு இது இன்றியமையாதது. ●

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காசாவில் போர் நிறுத்தம்: இஸ்ரேல் கடும்போக்காளர் எதிர்ப்பு! டிரம்ப் மத்தியஸ்தம் தொடருமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா






கட்டார், எகிப்து, அமெரிக்காவின் மத்தியஸ்த முயற்சியுடன் சிக்கலான காசா போர் நிறுத்த உடன்படிக்கை கட்டார் தலைநகர் டோஹாவில் ஜனவரி 15 புதன்கிழமை எட்டப்பட்டது.


பாலஸ்தீன காசாவில் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் போரை முடிவுக்குக் கொண்டு வரும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு இடையிலான உடன்பாடு தற்போது எட்டப்பட்டுள்ளது.

ஆனால் இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவது தொடர்பில் இஸ்ரேல் அமைச்சரவையில் வாக்கெடுப்பை நடத்த உள்ளமைக்கு ஹமாஸ் கடும் விமர்சனத்தை வெளியிட்டுள்ளது. இந்த உடன்படிக்கை தொடர்பில் இஸ்ரேலின் மொசாட் உளவுப் பிரிவு தலைவர் டேவிட் பார்னி கட்டாரில் இஸ்ரேல் அமைச்சரவையில் வாக்கெடுப்பின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கையின் ஆரம்ப கட்டத்தில் ஆறு வார போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படும். இதில் காசாவில் பேரழிவு மற்றும் பெரும் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்திய இஸ்ரேலியப் படை அங்கிருந்து படிப்படியாக வாபஸ் பெறப்படும்.

## பிரதான மத்தியஸ்தர்கள்:


Khalil Al-Hayya


Ronen Bar


David Barnea


Hassan Rashad


Sheikh Mohammed bin Abdulrahman Al Thani


Steve Witkoff


Brett McGurk

மேலும் ஹமாஸ் போராளிகளால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக் கைதிகள், இஸ்ரேலிய சிறையில் இருக்கும் பலஸ்தீன கைதிகளுக்கு ஈடாக விடுவிக்கப்படுவார்கள்.

ஆயினும் இந்த உடன்படிக்கை மீதான இஸ்ரேலின் இணக்கம் அதன் பாதுகாப்பு அமைச்சரவை மற்றும் அரசின் ஒப்புதல் கிடைக்கும் வரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட மாட்டாது. இதற்கான வாக்கெடுப்பு வியாழக்கிழமை இடம்பெறவிருந்தது.

ஆனால் இறுதியில் ஹமாஸ் அமைப்பு கடைசி நிமிடத்தில் மேற்கொண்ட நிபந்தனைகள் உடன்படிக்கைகளில் பின்னடைவை ஏற்படுத்தியதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குற்றம்சாட்டியுள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கையின் அனைத்து அம்சங்களுக்கும் ஹமாஸ் இணங்கியதாக மத்தியஸ்தர்கள் இஸ்ரேலை அறிவுறுத்தும் வரை இஸ்ரேலிய அமைச்சரவை கூடாது இஸ்ரேலிய அரசு தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கைக்கான ஹமாஸின் இணக்கத்தை மத்தியஸ்தர்களுக்கு புதன்கிழமை அறிவித்ததாக அந்த அமைப்பின் மூத்த உறுப்பினர் இஸ்ஸத் அல் ரஷீக் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கையை தடுப்பதற்கு நெதன்யாகு அரசில் உள்ள கடும்போக்காளர்கள் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் பெரும்பான்மையான அமைச்சர்கள் ஆதரவு அளிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயினும் ஹமாஸ் தோற்கடிக்கப்படுவதற்கு இஸ்ரேல் முழு அளவில் போரை நடத்தும் வரை தமது கட்சி அரசுடன் இருக்கும் என்று நிதி அமைச்சர் பெசாலல் ஸ்மொட்ரிச் குறிப்பிட்டுள்ளார். போர் நிறுத்தத்திற்கு ஒப்புதல் அளித்தால் அரசில் இருந்து விலகுவதாக தீவிர வலதுசாரியான பொலிஸ் அமைச்சரான இடாமர் பென் கிவிரும் எச்சரித்து வருகிறார்.

தற்போதைய இழுபறி காரணமாக உடன்படிக்கை நிறைவேற்றபட்டுமா அல்லது தொடர்ந்தும் போர் நடக்குமா என்பது குறித்து நெதன்யாகு அலுவலக அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த உடன்படிக்கை உடன் செயற்படுத்தப்பட வேண்டும் என்று பலஸ்தீனர்கள் மக்கள் விரும்புகின்றனர்.

ஒவ்வொரு மணி நேரத்திலும் காசா மக்கள் வீடுகளை இழந்து வருகின்றனர். ஞாயிறு வரை காத்திருக்காது போர் நிறுத்தத்தை அறிவித்து உடனடியாக செயற்படுத்த பாலஸ்தீன மக்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

> காசாவில் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு இஸ்ரேலிய கடும்போக்காளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இப்போர் நிறுத்தப்பட்டால் அமெரிக்காவில் பதவியிலிரந்து செல்லும் ஜே பைடன் அரசின் மத்தியஸ்த்தின் வெற்றியாகும். ஆயினும் காசாவில் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டதற்கு அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ள டொனால்ட் டிரம்பும் உரிமை கோரியுள்ளார்

போர் நிறுத்த அறிவிப்பை அடுத்து காசா மக்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டபோதும் இஸ்ரேல் தொடர்ந்து உக்கிர தாக்குதல்களை நடத்தியதாக கூறப்படுகிறது.

கட்டார் பிரதமர் ஷெய்க் முஹமது பின் அப்துல் ரஹ்மான் அல் தானி, உடன்படிக்கையை செயற்படுத்துவது தொடர்பில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிவித்துள்ளார். இந்த உடன்படிக்கை காசாவில் மோதலை நிறுத்தி, அதிகம் தேவையாக இருக்கும் பலஸ்தீன பொதுமக்களுக்கான மனிதாபிமான உதவிகள் அதிகரிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.



மேலும் கடந்த பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பணயக் கைதிகள் தமது குடும்பத்துடன் இணைவதற்கு வழிவகுக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், வாஷிங்டனில் வைத்து தெரிவித்தார்.

இதேவேளை போர் நிறுத்த உடன்படிக்கையின் வெற்றிக்கு அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ள டொனால்ட் டிரம்பும் உரிமை கோரியுள்ளார்.

2023 ஒக்டோபரில் பாலஸ்தீன போராளிகள் காசா மீது நடத்திய தாக்குதலில் 250 இஸ்ரேலியர்கள் வரை பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இதில் 94 பணயக்கைதிகள் வரை தொடர்ந்து காசாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேல் கூறுகிறது.

இவர்களில் 34 பேர் மரணித்திருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில் முதல் கட்ட போர் நிறுத்தத்தில் பெண்கள், சிறுவர்கள் மற்றும் வயதானவர்கள் என 33 பணயக்கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர்.

இதற்கு ஈடாக இஸ்ரேல் மீதான தாக்குதலால் ஆயுள் தண்டனைக்கு முகம்கொடுத்திருக்கும் பாலஸ்தீன கைதிகளை விடுவிக்க வேண்டிய நிலைக்கு இஸ்ரேல் தற்போது தள்ளப்பட்டுள்ளது. எனினும் இஸ்ரேலில் இந்த உடன்படிக்கைக்கு பரவலான ஆதரவு வெளியாகியுள்ளது.

போர் நிறுத்தம் அமுலாகினால் காசாவில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இருந்து இஸ்ரேலியப் படை கிழக்கு நோக்கி பின்வாங்கும். அங்கு இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் தமது வீடுகளுக்கு திரும்ப அனுமதிக்கப்படவிருப்பதோடு ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான உதவி வாகனங்கள் காசாவுக்கு செல்ல அனுமதிக்கப்படவுள்ளன.

இதன் பின்னர் இரண்டாம் கட்ட போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் எஞ்சியுள்ள பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் காசாவில் இருந்து இஸ்ரேலயப் படை முழுமையாக வாபஸ் பெறுவதில் அவதானம் செலுத்தப்படவுள்ளது.

இறுதியான மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தையின் முடிவில் காசாவை மீள கட்டியழுப்புவது மற்றும் எஞ்சியுள்ள பணயக்கைதிகளின் உடல்களை திரும்ப அளிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணுக்குத் தெரியாத பயங்கரவாதம் விபத்து!

## யுத்தத்தில் இறந்தவர்களை விடவும் விபத்துகளால் பலியானோர் அதிகம்

கொழும்பு,ஜன.19

**வீதி விபத்துகளால் தினமும் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை, யுத்தத்தின்போது இறந்தவர்களின் எண்ணிக்கையை விடவும் அதிகம் என்று பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.**

கிளீன் சிறீலங்கா திட்டத்துடன் இணைந்ததாக பொலிஸார் முன்னெடுத்துள்ள வாகன சோதனை நடவடிக்கைகளால், வாகன விபத்துகளால் ஏற்படும் நாளாந்த உயிரிழப்புகள் குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

'புதிய அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களில் பொலிஸின் செயல்பாடுகள்' என்ற தலைப்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலா



ளர் சந்திப்பின் போது அவர் மேலும் கூறுகையில்,

வீதி விபத்துகள் கண்ணுக்குத் தெரியாத பயங்கரவாதமாகும். வீதி ஒழுக்கத்தைப் பேணுவது மிகவும் முக்கியமானது.

கடந்த காலங்களில் வீதி விபத்துகளால் தினமும் சுமார் 9 பேர் உயிரிழந்ததாகவும், இந்த எண்ணிக்கை தற்போது 4 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனை இரண்டாக குறைக்க முயற்சித்து வருவதாகவும் கூறினார்.

மேலும், வீதி விபத்துகளால் நாள் ஒன்றுக்கு 10 முதல் 15 பேர் வரை நிரந்தர மாற்றுத்திறனாளிகளாக மாறுவதாகவும் யுத்தத்தின் போது நாள் ஒன்றுக்கு 4 முதல் 5 பேர் வரை உயிரிழந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்ட வாகன சோதனை நடவடிக்கைகள் காரணமாக, கடந்த டிசெம்பர் 25 ஆம் திகதி கிறிஸ்மஸ் தினத்தன்று எந்தவொரு வாகன விபத்துகளும் பதிவாகவில்லை என்றும், இது ஒரு சிறப்பு வாய்ந்த நிகழ்வு என்றும் பதில் பொலிஸ்மா அதிபர் கூறினார். (எ)



# எம்.ஜி.ஆர். நினைவுதினம் பாஷையூரில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

தமிழக முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனின் 108 ஆவது ஜனனதின நிகழ்வு யாழ்ப்பாணம் - பாஷையூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அன்னாரின் உருவச்சிலைக்கு யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் மலர் மாலை அணிவித்ததுடன் இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிறப்புரையும், வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கான உதவித்திட்டங்களும் வழங்கப்பட்டன.

இதில் யாழ்ப்பாணம், பாஷையூர் ஜிம்பிறவுண் குறூப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பலரும் கலந்துகொண்டனர். (எ-05)

# 28 கோடி ரூபா பணத்துடன் சிக்கிய போதைப்பொருள் கடத்தல்காரன்!

## போதைப்பொருள் தடுப்புப் பணியகம் சாதனை

குருநாகல்,ஜன.19

இலங்கை வரலாற்றில் போதைப்பொருள் கடத்தல்காரன் ஒருவனிடமிருந்து 280 மில்லியன் ரூபாய் என்ற மிகப் பெரிய தொகை பணத்தை கைப்பற்றி பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் சாதனை படைத்துள்ளது.

குருநாகல் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து இந்தப் பணத்தொகை கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த போதைப்பொருள் கடத்தல்காரன் சிறைச்சாலைக்குள் இருந்தவாறு போதைப்பொருள் வர்த்தகத்தை வழிநடத்தி வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சுற்றிவளைப்பின் போது 18 கிராம் ஐஸ் போதைப்பொருள், கப் ரக வாகனம் ஒன்றும் மற்றும் வான் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தற்போது சிறையில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரனை குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய நிலையில், அவனை தடுத்து வைத்து விசாரிக்க நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார்.

# இலங்கை: சீனாவுடன்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீட்டெடுக்க முடியும் என கொழும்பு பல்கலைக் கழகத்தின் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம். கணேசமூர்த்தி தெரிவிக்கிறார்.

அவரது கூற்றுப்படி, இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் பொருளாதார ரீதியாக இலங்கையின் பொருளாதாரம் ஒரு நிலைபேற்றுத் தன்மையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் வேளையில், இலங்கைக்கு மிக அத்தியாவசியமாக வெளிநாட்டு முதலீடுகள் தேவைப்படுகின்றன.

அதிலும் குறிப்பாக "இந்த முதலீடு கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய் யக்கூடிய, வர்த்தகரீதியில் மதிப்புமிக்க பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய துறைகளில் ஏற்பட வேண்டியது மிக அவசியம். அப்படி செய்கின்றபோது தான் ஏற்றுமதிகளை அதிகரிக்க முடியும். அதேவேளை, வெளிநாட்டு செலாவணியை உழைக்க முடியும்" என்று விளக்கினார் கணேசமூர்த்தி.

இலங்கை இப்போது அந்நிய செலாவணியை உயர்த்துவதற்கான ஓர் உற்பத்திக் கட்டமைப்பைக் கொண்டிருக்கவில்லை. அதனாலேயே இந்த வெளி நாட்டு முதலீடுகள் மிக முக்கியமானதாக இருக்கின்றன.

"மேற்குலக நாடுகளிடம் இருந்து முதலீடுகள் வருகின்றதைப் போலவே, சீனா போன்ற நாடுகளிடம் இருந்தும் முதலீடுகள் வருகின்றன. இப்போது ஏற்பட்டிருக்கிற இந்தப் புதிய சூழ்நிலையின் கீழ் சீனாவிலிருந்து அதிகளவான முதலீடுகள் இலங்கைக்கு வரக்கூடிய ஒரு தோற்றம் ஏற்பட்டிருக்கிறது.

சீனாவுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி விஜயத்தின் போது அத்த கைய முதலீட்டுத் திட்டங்களுக்கான வாய்ப்புகள் பிரகாசமாகத் தெரிவதாகத் தோன்றுகிறது" என்கிறார் கணேச மூர்த்தி.

ஆனால், பொதுவாக இந்த சீன முதலீடுகள் பலராலும் விமர்சன ரீதியில் பார்க்கக்கூடியதை அவதானிக்க முடிவதாகவும், சீன முதலீடுகள் கடன் பொறியாக அமையக்கூடும் என்ற ஒரு கருத்தும் இருப்பதாகக் கூறுகிறார் அவர்.

ஆனால், ஆபிரிக்க நாடுகள் உள் ளிட்ட ஏனைய நாடுகளில் மேற்கொள் ளப்பட்டுள்ள சீன முதலீடுகளை சுயாதீனமாக ஆராய்ந்து கருத்துகளைத் தெரிவிக்கின்ற நிறுவனங்களின் கருத்துப் படி, சீன முதலீடுகள் கடன் பொறியாக அமைந்திருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் என்ற முடிவிற்குத்தான் அவர்கள் வந்திருக்கிறார்கள் என விளக்குகிறார் கணேசமூர்த்தி.

அதாவது முதலீடுகளைக் கவர்கின்ற நாடுகள் அதை எவ்வாறு பயன்படுத்து கின்றன என்பதைப் பொருத்துதான் இந்த முதலீட்டுக்கான நன்மை தீமைகள் அமையும். இலங்கையைப் பொருத்த வரை முதலீடுகள் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற காலம் இது.

ஆகவே, "இந்த காலப் பகுதியில் வருகின்ற முதலீடுகளை மிகக் கவனமாகப் பயன்படுத்தி, வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற, அதிக விலைக்கு வெளிநாடு களில் விற்பனை செய்யக்கூடிய பொருட் களைத் தயாரிக்க ஏதுவாக இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் வகையில் இந்த முதலீடுகளைக் கொண்டு வருவது முக்கியமானது.

உயர் விலைக்கு விற்பனை செய்யக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் வகையான திட்டங்களை உருவாக்குவதன் ஊடாகவே, பொருளாதார மீட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். கடன் பொறியில் இலங்கை எதிர்காலத்தில் சிக்காத ஒரு பொறிமுறையையும் அது ஏற்படுத்தக்கூடும்" என கொழும்பு பல்கலைக் கழக பொருளியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம். கணேசமூர்த்தி விளக்கினார். (பிபிசி)

# சட்டவிரோத வாகன சாரதிகளுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை!

காரைதீவு, ஜன.19

காரைதீவு பிரதேச சபைக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்கள், மது போதையில் வாகனம் செலுத்துபவர்கள், போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்துபவர்கள், தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்கள், அனுமதிப் பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்துவோர் உட்பட சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டுவர் என்று காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். எஸ். ஜெகத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாவடிப்பள்ளி ஜும்மா தொழுகையைத் தொடர்ந்து பள்ளிவாசலுக்கு வருகை தந்த அவர் இவ்வாறு கூறினார்.

மோட்டார் சைக்கிள்களில் சாகசங்கள், இரவு நேரங்களில் இளைஞர் குழுக்கள் பெரும் சத்தங்களுடன் மோட்டார் சைக்கிள் செலுத்துதல், வீதியில் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு தொந்தரவு ஏற்படுத்தல் போன்ற ஆபத்தை விளைவிக்கும் விதமாக மோட்டார் சைக்கிள்களை செலுத்துதல் இனியும் தொடர இடமளிக்க முடியாது.

மேலும் வீதிகளில் கூடி நிற்கும் இளைஞர்கள் சம்பந்தமாகவும் மற்றும் போதைப்பொருள் பாவனை, போதைப்பொருள் விற்பனை செய்பவர்களுக்கு எதிராகவும் எடுக்கப்படும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் இந்த நபர்களுக்கு எதிராக பள்ளி நிர்வாகத்தால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் எடுத்துக்கூறினார். (எ)

# நீண்டகாலமாக இடம்பெற்ற மோசடி நேற்று அம்பலமானது

கொழும்பு,ஜன.19

எம்பிலிப்பிட்டியவிலிருந்து சிறிய லொறியில் சட்டவிரோதமாக ஏற்றிச் செல்லப்பட்ட 9 எருமை மாடுகளுடன், லொறியின் சாரதி உட்பட இருவரை கொட்டவில பொலிஸார் நேற்று அதிகாலை கம்புருகமுவ சந்தியில் வைத்து கைது செய்தனர்.

மாடுகளை ஏற்றிச் சென்ற லொறியை பொலிஸார் பறிமுதல் செய்தபோது, மாடுகளில் ஒன்று ஏற்கனவே இறந்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்டகாலமாக கால்நடை திருட்டு நடந்து வருவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டது.

கிளை வீதி ஒன்றின் வழியாக பயணித்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஊடாக, கொழும்பு நோக்கி இரகசியமாக செல்ல லொறி ஒன்று தயாராகி வருவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்திருந்தது.

இந்த நிலையில், இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்ட போது, அவர்களிடம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், வாகனத்தில் இருந்தும் ஹெரோயின் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த சிறிய ரக லொறியின் முன்பக்க இலக்கத்தகடும், வாகன வருமான உத்தரவு பத்திரமும் பொருந்தாத நிலையில், போலி இலக்கத்தகடுகளைப் பயன்படுத்தி இந்த மோசடி நடத்தப்படுகிறதா? என்பதைக் கண்டறிய பொலிஸார் விசேட விசாரணையைத் தொடங்கியுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை...

இணைந்து ஏற்பாடு செய்திருந்த தேசிய பொங்கல் விழா வெகு விமர்சையாக அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தலைமையில் இடம்பெற்றது.

தேசிய தைப்பொங்கல் விழாவானது நேற்றுக் காலை 7.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் சமய வழிபாடுகளுடன் ஆரம்பமாகி பின்னர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வரை ஆன்மிக விழிப்புணர்வு நடை பயணத்துடன் யூனியன் கல்லூரியில் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளில் பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல் ராஜ், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ-05)

## புங்குடுதீவு...

வீட்டில் இருந்து வெளியே சென்ற நிலையில் மீண்டும் வீடு திரும்பாமல் இருந்துள்ளார்.

இதனால் இவரது உறவினர்கள் இவரை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், இவர் நேற்று அப்பகுதியில் உள்ள குளம் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த குளத்துக்கு அருகிலிருந்து இவரது சைக்கிள் மற்றும் ஆவணங்கள் என்பவை பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இது தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## இந்தியா...

மற்றும் வரலாற்று பிணைப்புக்கள் ஆளமானவை மற்றும் நீடித்தவை. இந்த உறவுகள் மொழி இலக்கியம் மதம் கலை கட்டடக் கலை மற்றும் சமய மரபுகள் போன்ற நமது பாரம்பரியம் ஒவ்வொரு விடயத்திலும் ஊடுருவி ஒன்றோடு ஒன்று இணைந்து ஒரு வளமான பிணைப்பை உருவாக்குகின்றது.

இந்த ஆளமான பிணைப்புகள் தேவைப்படும் காலங்களில் இந்தியா இலங்கைக்கு வழங்கிய உறுதியான ஆதரவுகள் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. குறிப்பாக நெருக்கடியான தருணங்களில் இலங்கைக்கு இந்தியாவின் அசைக்கமுடியாத ஒற்றுமை இந்த நீடித்த நட்புக்கு ஒரு சான்றாகும்.

இந்திய அரசால் வழங்கப்பட்ட வீடமைப்பு திட்டங்கள் மற்றும் வாழ்வாதார திட்டங்கள் போன்ற முன்முயற்சிகள் பாதிக்கப்பட்ட சமூகங்களை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

கொவிட் தொற்று நோய்களின் போது இந்தியா உடனடி பொருளாதார மற்றும் மருத்துவ உதவிகளை வழங்கியது. அதனைத் தொடர்ந்து இலங்கையின் பொருளாதார மீட்சியின் போது முக்கியமான ஆதரவை வழங்கியது.

இந்த நல்லெண்ண செயல்கள் நமது நாடகளிடையே நீடிக்கும் கூட்டுறவையும் பரஸ்பர மரியாதையையும் எடுத்துக்காட்டுகின்றது.

மேலும் கலை கலாசார மற்றும் மதப் பரிமாற்றங்களிலும் இந்தியா தொடர்ந்து வெற்றி பெற்று நம்மை ஒன்றிணைக்கும் வரலாற்று பிணைப்புக்களை மேலும் வலுப்படுத்துகிறது. "இந்தியா, நிபந்தனையற்ற உறுதியான அண்டை நாடாகவும், இலங்கையின் அனைத்து முயற்சிகளிலும் உண்மையான நண்பனாகவும் இருந்திருக்கின்றது, எப்போதும் இருக்கும்" வருங்காலங்களில் நமது நாடுகளிடையேயான உறவுகள் மேலும் வலுவாக வளரட்டும் - என்றார். (அ)

## திருவள்ளுவர்...

மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனெவி, கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா இணைந்து பெயரை டிஜிற்றல் திரை மூலம் மாற்றம் செய்தனர்.

இந்த நிகழ்வில் யாழ் மாநகர சபை ஆணையாளர் எஸ்.கிருஷ்ணேந்திரன், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணை தூதுவர் சாய் முரளி, புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா, பேராசிரியர்கள், சமய தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் 1.6 பில்லியன் ரூபாய் நிதிப் பங்களிப்புடன் கடந்த 2023 ஆம் ஆண்டு குறித்த கலாசார மத்திய நிலையம் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ்.நகை...

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து குறித்த செயலுக்கு உடந்தையாக இருந்த வான் சாரதி உள்ளிட்ட 3 பேர் கண்டியில் கைது செய்யப்பட்டனர்.

மேலும் இரண்டு சந்தேக நபர்களை தேடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக்கடை ஒன்றுக்குச் சென்ற குழு, பொலிஸ் புலனாய்வு பிரிவு என தெரிவித்து 30 இலட்சம் ரூபா பணத்தை பறித்துச் சென்ற சம்பவம் பதிவானது.

இது தொடர்பில் கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன், பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

அதற்கமைய, சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (அ)

## முன்வைத்த...

10 மணியளவில் திருகோணமலை சர்வோதயம் மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், இரா. சாணக்கியன், வைத்தியர் ஸ்ரீநாத், சிறிநேசன், குகதாசன், கோடீஸ்வரன், ரவிகரன், ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன், உறுப்பினர்கள் சயந்தன், பீற்றர் இளஞ்செழியன், யோகேஸ்வரன், சேயோன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

மாலை 4.00 மணி வரை இடம்பெற்ற இக் கூட்டம் தொடர்பில் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் தெரிவிக்கையில்- உள்ளூராட்சித் தேர்தல்களில், முன்னர் தங்கள் கட்சியால் வேட்பு மனு வழங்கப்பட்ட வேட்பாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலும், புதிய வேட்பாளர்களை தொடர்ச்சியாகவும் உள்வாங்குதல் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அரசியல் தீர்வு தொடர்பில் தாங்கள் முன்வைத்த தீர்வு திட்டங்களை தொடர்ச்சியாக கொண்டு செல்வது எனவும், அதற்காக ஏழு பேர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், கட்சிக்கு எதிரான வழக்கு தொடர்பில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய வெகு விரைவில் வழக்குகளை முடித்து வைப்பதாகவும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

அத்துடன், புதிய அரசியலமைப்பை அமுல்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியை வலியுறுத்துவதெனவும் அவர் தெரிவித்தார். (அ)

# கட்டைக்காட்டில் கரையொதுங்கிய மிதவை

யாழ்ப்பாணம்,ஜன.19

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்கரையில் மிதவை ஒன்று நேற்று மாலை கரையொதுங்கியுள்ளது.

கடலில் நிலவும் கடும் காற்றால் குறித்த மிதவை கரையொதுங்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் அதே வேளை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் சம்பவம் தெரியப்படுத்தப்பட் டுள்ளது



கரையொதுங்கிய மிதவையை இராணுவம், கடற்படை, பொது மக்கள் என பலர் பார்வையிட்டு வருவதோடு பொது மக்களின் உதவியோடு மிதவையை மீட்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளிலும் மிதக்கும் கூடாரங்கள், மிதவைகள் போன்றன கரையொதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## இலங்கையில்...

கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்.

இந்தப் பயணத்தின் போது, இரு தரப்பினரும் 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டனர். அம்பாந்தோட்டையில் 3.7 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள ஏற்றுமதி சார்ந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

ஜனாதிபதியின் இந்தப் பயணத்தில் சீன அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களின் உயர் மட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்ட "இலங்கையில் முதலீடு செய்யுங்கள்" வட்ட மேசை மாநாட்டி உரையாற்றிய ஜனாதிபதி,

இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளை வழிநடத்தும் பரந்த தொலைநோக்கை எடுத்துரைத்தார் மற்றும் இலங்கையில் முதலீடு செய்ய வணிக சமூகம் ஆர்வமுள்ள முக்கிய பகுதிகள் குறித்து தெளிவுபடுத்தியிருந்தார்.

முதலீட்டு மன்றத்தில் கலந்து கொண்ட சீன நிறுவனங்கள், எரிசக்தி, வாகன உற்பத்தி மற்றும் கட்டுமானம் போன்ற பல்வேறு துறைகளில் 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையிலான முதலீடுகளை இலங்கைக்கு வழங்கத் தயாராக உள்ளதாக கூறியதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

## பயங்கரவாத...

ஜனாதிபதித் தேர்தல் குறித்த தமது விரிவான பகுப்பாய்வை வெளியிட்டுள்ள, இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு பணிக்குழு, நாட்டின் ஜனநாயகப் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் என்றும் கூறியுள்ளது.

தனது இறுதி அறிக்கையை அந்தக் குழு கொழும்பில் வெளியிட்டது.

அதில், முக்கிய சாதனைகளை எடுத்துரைத்ததுடன், எதிர்கால தேர்தல் செயல்முறைகளை மேம்படுத்த 16 பரிந்துரைகளையும் வழங்கியுள்ளது.

இது இலங்கையின் ஜனநாயகக் கொள்கைகளுக்கான சர்வதேச உறுதிப்பாடுகளை அடிக்கோடிட்டுக் காட்டுவதாகவும் குழு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது ஊடகவியலாளர்களுக்கு மத்தியில் உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினரும், தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைமை பார்வையாளருமான நாச்சோ சான்செஸ் அமோர் இந்தத் தேர்தலை இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் மீள்தன்மைக்கு ஒரு சான்றாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

2024 ஜனாதிபதித் தேர்தலில், இலங்கையின் குடிமக்கள் ஜனநாயக செயல்முறைக்கு தங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினர்.

அதே நேரத்தில் இலங்கை தேர்தல் ஆணையகமும், சுதந்திரமாகவும் உறுதியுடனும் செயல்பட்டு, அனைத்து முக்கிய தேர்தல் கட்டங்களிலும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தது என்று அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், அரசியலில் பெண்களின் பங்கேற்பை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், தேர்தல் பிரசாரங்களின்போது அரசு வளங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வழிமுறைகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அறிக்கை பரிந்துரையாக எடுத்துக்காட்டியுள்ளது.

அத்துடன்,அறிக்கையின் குறிப் பிடத்தக்க பரிந்துரைகளில், வெளிப் படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூற லுக்கு தொடர்ந்து முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதும் அடங்கியுள்ளது. (அ)

## 25ஆம் திகதி...

கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில கட்சிகள், தங்களது தேவைக்காக அல்லது புறக்கணிக்கப்பட்டதாக உணர்ந்து, தனித்து செயல்பட முயல்கின்றன.

ஆனால், கடந்த பாராளுமன்ற அமர்வின்போது, பாராளுமன்ற குழுத் தலைவர்கள் மத்தியில் கலந்துரையாடல் நடந்தது. அது, அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைக்கவேண்டிய நோக்கில் அமைந்தது.

இதனைத் தொடர்ந்து, எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திப்பில், பாராளுமன்ற குழுத் தலைவர்களைத் தாண்டி, கட்சியின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதோடு, இனப்பிரச்னை தொடர்பாக அறிவியல் மற்றும் அதிகார ரீதியான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் நபர்களையும் இணைக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

இந்த சந்திப்பு ஆக்கபூர்வமாக அமையவேண்டும். கட்சி ரீதியாக பேசப்பட்டு ஒருமித்த முடிவுக்கு வரவேண்டியது அவசியம்.

நாம் கலந்துரையாடிய பிறகு, கட்சியின் அனுமதியைப் பெறவேண்டும் என்பதே முறையாகும். எந்த ஒரு குழுவும் கட்சியின் அனுமதியின்றி செயல்படக்கூடாது.

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் சந்திப்பு, தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு திருப்புமுனையாக அமையும். அரசாங்கம் தனது வசதிக் கேற்ப தமிழ்த் தேசிய அரசியலை நசுக் கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில், தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை வலியு றுத்தும் தரப்புக்கள் ஒன்று கூடவேண்டும்.

தமிழர்களின் பாரம்பரிய அரசியல் நிலைப்பாட்டை மக்கள் மதிக்கவேண்டும். தமிழ் தேசிய அரசியல், உரிய கௌரவத்துடன், எதிர்காலம் நோக்கி முன்னேற, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதனை உணர்ந்து செயற்படுவதற்காகவே, இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளோம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# இனவாத அரசியலையே இந்த அரசும் செய்கிறது!

## கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜன. 19

**தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு, பயங்கரவாததடைச் சட்டத்தை நீக்கம் போன்ற வாக்குறுதிகளை வழங்கி தேர்தல் வெற்றியடைந்த தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி), தற்போது இனவாத அரசியலை முன்னிலைப்படுத்தி வருகின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

காங்கேசன்துறை வீதியில் உள்ள தனது கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாயவும் செய்யாத அளவுக்கு இனவாத அரசியலை தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மேற்கொள்ள முயல்கிறார் என கூறினார்.

2019 ஜனாதிபதித் தேர்தலின் போது, அநுரகுமார யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் தமிழர் பிரச்னைகளை தீர்க்கவென வாக்குறுதிகள் அளித்தார். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவர் என்று அவர் உறுதியளித்த நிலையில், அவரது அமைச்சரவையின் நீதி அமைச்சர் தற்போது "சிறைகளில் எந்த தமிழ் அரசியல் கைதியும் இல்லை" எனத் தெரிவிக்கிறார்.

இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஜே.வி.பியின் இனவாத முகத்தை அம்பலப்படுத்துகிறது. தமிழ் மக்களின் நம்பிக்கையை திருப்பி திசை மாற்றுவதே இப்போதைய அரசின் நோக்கம். தமிழர் பிரதேசங்களில் சிங்கள குடியேற்ற முயற்சிகள் வலுப்பெற்றுள்ளன.

தெல்லிப்பழை பிரதேசத்தில் தனியார் காணிகளில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட தையிட்டி விகாரையை அகற்றவேண்டிய தேவையை முறைப்பாடுகள் பல முறை முன்வைக்கப்பட்ட போதும், இதுவரை அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தமிழர் பிரச்னைகளைப் பேசி வாக்குகளை அள்ளிய ஜே.வி.பி, தற்போது தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. இது எதிர்கால தமிழர் பிரதேசங்களின் நிலையை மிக மோசமாக பாதிக்கும். எனவே, இனவாத அரசியலின் முகவாடையை கிழித்தெறிய தமிழர் விழிப்புடன் செயல்படவேண்டும்.

இவ்வாறு, ஜே.வி.பியின் செயல்பாடுகள் இனவாதத்தை பிரதிபலிக்கும் வகையில் மாறிக் கொண்டிருப்பதை தமிழ் மக்கள் கணிக்க வேண்டிய நேரம் இது - என்றார். (அ)

## ரயிலில் பயணிகளுக்கு மசாஜ் ரயில் திணைக்களம் விசாரணை

கொழும்பு, ஜன. 19

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு ரயிலில் மசாஜ் செய்வது போன்று காணொளி சமூக ஊடகங்களில் வெளியாகி வைரலானதை அடுத்து ரயில் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் ரயில் திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவிக்கையில்-

இந்த ரயில் சுற்றுலாவுக்காக தனியார் நிறுவனம் ஒன்றினால் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்களை கட்டணம் செலுத்தி வாடகைக்கு எடுக்க தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சுற்றுலா பயணிகளுக்கு மசாஜ் சேவை வழங்குவது குறித்து திணைக்களத்துக்கு அறிவிக்கப்படவில்லை.

வழக்கமாக சேவையில் ஈடுப்படும் பயணிகள் ரயிலில் இந்த சம்பவம் நடைபெறவில்லை. விசாரணை நடந்து வருகிறது, மேலும் சுற்றுலாப் பொலிஸாரையும் ஈடுபடுத்தியுள்ளோம். ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் பொறுப்பானவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

## அரச ஊழியர்களுக்கு அரசியல் அழுத்தம் பிரயோகிக்கப்படாது!

### பிரதி அமைச்சர் ருவன் செனரத்

கொழும்பு, ஜன. 19

அரச ஊழியர்களுக்கு அரசியல் அழுத்தங்கள் எதுவும் பிரயோகிக்கப்படாது என மாகாண சபை மற்றும் உள்ளாட்சி பிரதி அமைச்சர் ருவன் செனரத் தெரிவித்தார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளின் பணிகளை மறு ஆய்வு செய்வதற்கான முதலாவது மாநாடு நேற்று தெற்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு நடைபெற்றது.

இந்த மாநாடு பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அபேரத்ன ஹேரத், மாகாண சபை மற்றும் உள்ளாட்சி பிரதி அமைச்சர் ருவன் செனரத் மற்றும் தெற்கு மாகாண ஆளுநர் எம். கே. பந்துலா ஹரிசந்திரா ஆகியோரின் தலைமையிலேயே இடம்பெற்றது.

புதிய அரசாங்கத்தின் திட்டத்துக்கு இணங்க, மாகாண சேவைகளை வழங்குவதன் மூலம் வளர்ச்சி இலக்குகளை அடைவது எளிதாக இருக்கும் என்று மாநாட்டில் பங்கேற்ற மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ருவான் செனரத் கூறினார்.

முந்தைய அரசியல் கலாசாரத்தின் கீழ், அரசியல் பதவி மாற்றங்கள் அல்லது அரசியல் நீரோட்டத்தின் அழுத்தங்கள் காரணமாக, அரசு ஊழியர்கள் நாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் விஷயங்களில் கூட தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டியிருந்தது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் கீழ், அத்தகைய அழுத்தங்கள் இருக்காது என்றும், நாட்டை சரியான திசையில் கொண்டு செல்லும் போது, அரசாங்கம் அரச ஊழியர்களின் பக்கமே நிற்கும். அரசு ஊழியர்கள் சரியானவர்களாக இருந்தால், அத்தகைய சந்தர்ப்பங்களில் ஊழியர்களைப் பாதுகாக்க அரசு உறுதிபூண்டுள்ளது என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். (அ)

## ரயில்வே ஈ-ரிக்கெற்றில் மோசடி; பொலிஸ் அதிகாரி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன. 19

ரயில்வே ஈ-ரிக்கெற் மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட மாகும்புர ரயில் நிலைய பொலிஸ் அதிகாரி ஒருவரின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அதிகாரி, தனது உறவினர் ஒருவரின் பெயரில் தனியார் நிறுவனம் ஒன்றை தொடங்கி, அதன்மூலம் ரயில் ரிக்கெற்றுகளை விநியோகித்துள்ளதாக கூறப்படுகிறது. இவ்வாறு அவர், ஒன்லைன் மூலம் ஈ-ரிக்கெற்றுகளை முன்பதிவு செய்து, அவற்றை பல்வேறு நபர்களுக்கு விற்று வருமானம் ஈட்டியதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், மோசடியில் தொடர்புடையவர்களுக்கும் தனிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. (அ)

## ஐ.தே.க - சஜித் அணி கூட்டுசேர கட்சியின் மத்திய குழு ஒப்புதல்!

கொழும்பு, ஜன. 19

ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என கட்சி ஆதரவாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

'ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்த வேண்டும் என கட்சியின் முகாமைத்துவக்குழு முடிவெடுத்தது. அதற்கு கட்சியின் மத்திய செயற்குழு அனுமதி வழங்கியது.

இதற்கமைய பொது இடமொன்றில் வெகுவிரைவில் பேச்சுகள் ஆரம்பமாகும்." - எனவும் அவர் கூறினார். (அ)

## இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் உப்பு அடுத்த வாரம் வரும்!

கொழும்பு, ஜன. 19

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உப்பு அடுத்த வாரம் நாட்டை வந்தடையும் என இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் 30,000 மெற்றிக் தொன் உப்பை இலங்கைக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முந்தைய பருவமழை காலத்தில் உள்ளூர் உப்பு உற்பத்தியில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக, உப்பை இறக்குமதி செய்ய அரசாங்கம் முடிவு செய்திருந்தது.

அதன்படி, நாட்டுக்கு உப்பு இறக்குமதி செய்ய இரண்டு இறக்குமதியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (அ)

## மாடுகளை கடத்திய இரண்டு பேர் கைது!

கொழும்பு, ஜன. 19

எம்பிலிபிட்டியவில் இருந்து சட்டவிரோதமாக ஏற்றிச் செல்லப்பட்ட 09 எருமை மாடுகளையும், லொறியின் சாரதியையும் கொட்டாவிலுள்ள பொலிஸார் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

மாடுகளை ஏற்றிச் சென்ற லொறி பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட போது, அதில் மாடு ஒன்று ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சோதனை, அண்மைக்காலமாக மாடு திருட்டு நடைபெறுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும், வாகனத்தில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும், லொறியில் ஹெரோய்ன் போதைப்பொருளும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

வாகனத்தில் போலி இலக்கத் தகட்டை பயன்படுத்தி கடத்தல் நடைபெற்றதாகவும் கூறிய பொலிஸார், விசாரணை ஆரம்பித்துள்ளனர். (அ)

## 24ஆம் திகதி சபையில் சம்பந்தனுக்கு அனுதாபம்!

கொழும்பு, ஜன. 19

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான மறைந்த இரா. சம்பந்தனுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீது பாராளுமன்றத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி விவாதம் நடைபெறவுள்ளது.

பாராளுமன்றம் எதிர்வரும் 21 முதல் 24 ஆம் திகதி வரை கூடவுள்ளது.

இதன்போது ஜனவரி 24 வெள்ளிக்கிழமை, மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக முழு நாளும் ஒதுக்கப்படவுள்ளது.

அதற்கமைய, மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஆர். சம்பந்தன், ருக்மன் சேனாநாயக்க, ரொஜினோல்ட் பெரேரா, சிறினால் த மெல் மற்றும் மொஹமட் இல்யாஸ் ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக அன்றைய தினம் மு.ப. 9.30 முதல் பி.ப. 5.30 வரை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.